
# செங்கலம்

இதழ் - I

தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர்
ஒக்டோபர் 2017



ජාතික කියවීමේ මාසය, ඔක්තෝබර් - 2017

National Reading Month, October - 2017

பொது நூலகம்,
பிரதேச சபை, வெங்கலச்செட்டிகுளம்

# பொது நூலகம்
# பிரதேசசபை
# வெங்கலச்செட்டிகுளம்

**தேசிய வாசிப்பு மாத சிறப்பு மலர்**
**2017**

**நூல் விபரம்**

| | | |
|---|---|---|
| நூல் | : | "செங்கலம்" தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழ் |
| வெளியீடு | : | பொதுநூலகம், பிரதேச சபை, வெங்கலச்செட்டிகுளம் |
| வருடம் | : | 2017 |
| இதழ் | : | 01 |
| பக்கம் | : | xx+34 |
| அளவு | : | B5 |
| மலர்க்குழு | : | நூலகர் சக நூலக உத்தியோகத்தர்கள் |
| ISSN | : | 2602 - 8670 |

**மலருள்ளே.....**


| | பக்கம் |
|---|---|
| 1. பிரதேசசபை கீதம் | iv |
| 2. ஆசிச்செய்திகள் | |
| i. முதலமைச்சரின் செயலாளர் | v |
| ii. உள்ளூராட்சி ஆணையாளர் | vi |
| iii. பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் | vii |
| iv. பிரதேச செயலாளர் | viii |
| v. செயலாளர் | ix |
| 3. முன்னுரை - நூலகர் | x |
| 5. வாசிப்பின் முக்கியத்துவம் | 01 |
| 4. உள்ளூராட்சி அமைப்பும் சட்டமும் நிறுவன நற்செயற்பாட்டிற்கு செயற்குழுவின் அத்தியவசியமாகும் | 04 |
| 5. புத்தக தினமும் புத்தக நேசிப்பும் | 10 |
| 6. நூலக சேவைகள் | 13 |
| 7. கற்றனைத்தூறும் அறிவு | 16 |
| 8. அச்சுக்கலை | 19 |
| 9. நூலகமும் தற்கால சமூகமும் | 22 |
| 10. வாழ்வை வளப்படுத்தும் வாசிப்பு | 24 |
| 11. வாசிப்பும் சமூக மேம்பாடும் | 27 |
| 12. மாணவர்களின் மாண்பும் நூலகத்தின் பண்பும் (1ம் இடம் பெற்ற கட்டுரை) | 29 |
| 13. வாசிக்க வாசிக்க வானமும் வசப்படும் (1ம் இடம் பெற்ற கவிதை ) | 30 |
| 14. மானிட வாழ்வில் புத்தகம் பேசும் (வெற்றி பெற்ற சிறுகதை) | 32 |
| 15. தேசிய வாசிப்பு மாதப் போட்டி முடிவுகள் 2017 வெற்றி பெற்றோர் விபரம் | 34 |

# பிரதேசசபை கீதம்

வாழ்க வாழ்க வெங்கலச்
செட்டிகுளம் பிரதேச சபை
வாழ்க என்றும் வாழ்க இந்த
வையகத்தில் தமிழென (வாழ்க)

ஈழமாம் எமது நாட்டின்
இதயமாம் வன்னி மணணின்
வாழ நல்ல வவுனியா மா
வட்டத்திலே அமைந்த நிலம் (வாழ்க)

வீர நாராயனன் என்னும்
வெங்கல செட்டி பேரால்
விளங்கும் வெங்கல செட்டி
குளம் வாழ்க (வாழ்க)

தரனி போற்ற நல்ல
தனித்துவ மாக என்றும்
தலைநிமிர்ந் தோங்கி பிரதேச
சபை வாழ்க

வீதி கல்வி வீடு கால்வாய்
விளக்கு சந்தை பூங்கா சுத்தம்
ஆதி யான பணிகள் நூல்
அகம் மயானம் சிறுவர் நலன் (வாழ்க)

கலைகள் மொழி சமயம் வரி
கட்டி டங்கள் சட்ட ஆக்கம்
விலை யிலாத மக்கள் வாழ்வு
வீறு பெறச் செய்து வாழ்க (வாழ்க)

மக்கள் பணி ஆற்ற என்றும்
மக்கள் தெரிந்தெடுத்த சபை
மக்கள் வாழ்வுக் கனைத் தையுமே
மாண்பு டனே ஆற்றி வாழ்க (வாழ்க)

எங்கள் தேவை தனை அறிந்து
எங்களுக்காய் சேவை செய்யும்
எங்கள் பிரதேச சபை
எங்கும் புகழ் பரப்பி வாழ்க



திரு.சு.விஜயதாஸ்

செயலாளர்

பிரதேசசபை, வெங்கலச் செட்டிகுளம்

வெங்கலச்செட்டிகுள பிரதேச சபையில் கடமையாற்றும்
உத்தியோகத்தர்களும், ஊழியர்களும்





# முதலமைச்சரின் செயலாளரின் ஆசிச்செய்தி

"வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்"

உள்ளூராட்சி நிறுவனங்கள் வருடந்தோறும் வாசிப்பு மாதத்தினை கொண்டாடி வருகின்றன. இவ் உள்ளூராட்சி நிறுவனங்களின் ஆளுகையின் கீழ் நூல் நிலையங்கள் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன. நூலகங்கள் அறிவாலயங்களாகத் திகழ்கின்றன. வாசிப்பதன் மூலம் அறிவு விருத்தியாகின்றது, மனித வளர்ச்சிக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் இது மிக அவசியமாகும். தற்போது மக்கள் மத்தியில் குறிப்பாக இளைஞர் யுவதிகளிடம் வாசிப்பு மிகவும் அருகிவருகின்றது. தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் பாவனையில் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றது. சிறந்த வாசிப்புத்திறன் கொண்ட மாணவர்கள் தேர்ச்சி மட்டத்தில் உயர்நிலையில் உள்ளனர். ஆசிரியர்கள் ஆரம்ப வகுப்பு மாணவர்களிடம் இப்பழக்கத்தை ஏற்படுத்துவார்களாயின் சிறந்த சமூகத்தை உருவாக்க முடியும். பல்துறைசார்ந்த அறிவு மனிதனை பகுத்தறிவு உள்ளவனாக்குகின்றது. கற்றல், கற்றபடி வாழ்தல் மனிதனை மனிதனாக வாழ வழிவகுக்கும். பல்துறைசார்ந்த பலவகையான நூல்களை நூல் நிலையங்களில் பெற்றுக் கொள்ள ஆவண செய்தல் வேண்டும். இந்த வசதிகளை மேலும் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். இவ்வகையான சிறந்த கைங்கரியத்தை மேற்கொள்ளும் செட்டிகுளம் பிரதேசசபையின் செயலாளர், நூலகர், சக உத்தியோகத்தர்களை மேலும் சிறப்புற சேவை செய்ய வேண்டும் என இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

**திருமதி. றூபினி வரதலிங்கம்**
**செயலாளர்,**
**முதலமைச்சரின் அமைச்சு,**
**வடமாகாணம்.**



# உள்ளூராட்சி ஆணையாளர், ஆசிச்செய்தி

வெங்கலச்செட்டிக்குளம் பிரதேசசபையின் கன்னி முயற்சியால் உருவாகி வெளியிடப்படுகின்ற "செங்கலம்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தியினை வழங்குவதில் வடமாகாண உள்ளூராட்சி ஆணையாளர் என்ற வகையில் பேருவகை அடைகின்றேன்.

உள்ளூராட்சி மன்றத்தின் உட்கட்டமைப்பு சேவைகளை வழங்குவதன் ஓர் அங்கமாக நூலக சேவையினை வழங்கி வருதல் யாவருமறிந்த ஒன்றே. அவை தத்தமது நிர்வாக எல்லைக்குட்பட்ட மக்களின் கல்வி மற்றும் எழுத்தறிவு என்பவற்றின் முன்னேற்றம் கருதி தேசிய வாசிப்பு மாதமாகிய ஒக்டோபரில் பல்வேறு ஆக்கத்திறன் போட்டிகளை நடாத்தி அறிவுத்திறன் விருத்திக்கு பெரும் பங்காற்றுகின்றன.

அந்தவகையில் வெங்கலச்செட்டிகுளம் பிரதேசசபையும் அவ்வாறானதொரு முயற்சியின் மூலம் "செங்கலம்"என்னும் சஞ்சிகையினை வெளியிடுவது போற்றுதற்குரிய ஒன்றாகும்.

செந்தாமரையானது கடிகமழ்ந்து எவ்வாறு எல்லோரையும் வசீகரிக்கின்றதோ அதுபோல அதன் பெயரை ஒத்த செங்கலம் என்னும் இச் சஞ்சிகையும் எல்லோர் மத்தியிலும் நீங்கா இடம் பெற்றுக்கொள்ள வேண்டுமென்றும், ஆண்டுதோறும் அதன் தொடர்பாகங்களும் வெளிவர வேண்டுமென்றும் வாழ்த்தி நிற்கின்றேன்.

**திரு.ம.பற்றிக் டிறஞ்சன்,**
**உள்ளூராட்சி ஆணையாளர்,**
**வடமாகாணம்.**

# உள்ளூராட்சி உதவி ஆணையாளர், ஆசிச்செய்தி

வாசிப்பு மனிதனைப் பூரணப்படுத்தும் என்னும் கருத்திற்கமைய பலரும் ஆக்கங்கள் புத்தகங்கள் எழுதலாம். ஆயினும் சிந்தனையை தூண்டி அடுத்தவர்களைத் தூண்டும் விதத்திலும், படித்தவர் படிக்காதவர் யாவரும் விளங்கும் வகையிலும் எளிய நடையில் அழகுமொழியில் எழுதுவது அவர்களது கலையாகும். வெங்கலச்செட்டிகுள பிரதேச சபையினால் "செங்கலம்"என்ற சஞ்சிகை கன்னி வெளியீடு சிறப்பாக செய்யப்பட்டுள்ளது என்பது பாராட்டத்தக்கதாகும்.

யாவருக்கும் கல்வி என்னும் எண்ணக்கரு வளர்ச்சியடைந்திருக்கும் இக்காலகட்டத்தில் வாசிப்பு பழக்கத்தையும், அறிவாற்றலையும் தினமும் வளர்த்துக் கொண்டே இருக்க வேண்டும். இதற்கு வள்ளுவப்பெருந்தகை,

"தொட்டனைத்து ஊறும் மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத்துஊறும் அறிவு" என்கிறார்.

மணற்கேணியை ஆழமாக்கிக் கொண்டு செல்லச் செல்ல நீரானது ஊற்றெடுக்கும், மேலும் மேலும் ஆழமாக்கினால் நீரானது மிகையாகப் பெருகிக்கொண்டே வரும். அதுபோலவே நூல்களைத் தேடித்தேடி வாசித்து கற்றுக்கொள்ள, அறிவு விருத்தி அடையும்.

செங்கலம் என்னும் நூல் சகல மக்களுக்கும் விசேடமாக சமூகத்திற்கும் மிகச் சிறந்த பயனைத் தரும் என்பதோடு இது போன்ற மேலும் பல ஆக்கங்கள், நூல்கள், காவியங்கள், கட்டுரைகள் கவிதைத் தொகுப்புக்கள் வெங்கலச்செட்டிகுளப் பிரதேசசபை இப்பிரதேசத்திற்கும் நாட்டு மக்களுக்கும் வாசிப்பு மாதத்தை சிறப்பிக்கும் வகையில் பல சிறப்பிதழ்களை வழங்க வேண்டும் என வேண்டி செங்கலம் என்னும் மலர்சிறப்புடன் மலர்வதையிட்டு எனது நல்லாசிகளை வழங்குகின்றேன்.

**திரு.அசங்க காஞ்சன குமார,**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,**
**பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,**
**வவுனியா.**

# வெங்கலச்செட்டிகுள பிரதேச செயலாளரின், ஆசிச்செய்தி

"சிறந்த புத்தகம் சிறந்த நண்பர்கள்"என்று கூறுவார்கள். முன்னோர் தம் அறிவையும், அனுபவத்தையும் நமக்குள் இறக்கிவைக்கும் நண்பர்கள் தான் நூல்கள். நூலைப் படைத்தவனும், நூலைப் படித்தவனும் ஒருநாள் மாண்டுபோனாலும் யாண்டும் யாண்டும் வாழும் வரம் பெற்றவை நூல்கள்.

அறிவுப் பிரவாகம் ஊற்றெடுக்கும் இக் காலத்தில் வாசிப்பின் மீதான பற்றினை ஏற்படுத்த நூலகங்கள் நவீன மயப்படுத்தப்பட்டு அறிவார்ந்த தன்மைக்கு வித்திட வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அந்தவகையில் வாசிப்பு மாதத்தையொட்டி "செங்கலம்" என்னும் இச்சஞ்சிகை வெளிவருவது மிகவும் வரவேற்கத்தக்கதொரு விடயமாகும். பல்வேறு வகையான ஆக்கங்களைக் கொண்டு வெளிவரும் இச் சஞ்சிகைக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

செட்டிகுளம் பிரதேசத்தில் காணப்படும் ஒரேயொரு நூல் நிலையமானவெங்கலச் செட்டிகுளம் பிரதேசசபை நூல் நிலையமானது தனது பிரதேச மாணவர்கள், மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்குடன் இந் நூலைவெளியிடுவது இப்பிரதேசத்திற்கு கிடைத்துள்ள பெரும் வரப்பிரசாதமே.

வாசிப்பு ஒரு மனிதனை பூரணமாக்குகின்றது. வாசிப்பு பழக்கத்தை மாணவர்களிடையே ஏற்படுத்துவதன் மூலம் மாணவர்கள் சிறந்த ஒழுக்கசீலர்களாகவும் பல்வேறு துறைகளில் அறிவு மிகுந்தவர்களாகவும் வெளிவருவார்கள். பிரதேச மக்கள் தமது பொழுதினை பயனுள்ள விதத்தில் செலவிடுவதற்கும், புத்தி ஜீவிகளை கொண்ட பிரதேசமாக இப்பிரதேசம் வளர்ச்சியடைவதற்கும் இவ்வாறான செயற்பாடுகளூடாக இந் நூல் நிலையம் பெரும் பங்காற்றும் என்பதில் ஐயமில்லை.

இந் நூல் நிலையம் பிரதேச மக்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவித்து பிரதேச அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் இவ்வாறான செயற்பாடுகளை சிறந்த முறையில் முன்னெடுக்க இறையாசி வேண்டி நிற்பதுடன் நூல் வெளியீடு இனிதே நடைபெற வாழ்த்துகின்றேன்.

**திரு. கை. சிவகரன்**
**பிரதேச செயலாளர்**
**வெங்கலச்செட்டிகுளம்**

# வெங்கலச்செட்டிகுள பிரதேச சபை செயலாளரின், ஆசிச்செய்தி

ஒக்டோபர் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு எமது பிரதேசசபையின் பொது நூலகத்தினால் முதல் முறையாக வெளியிடப்படும் தேசிய வாசிப்பு மாத சிறப்பிதழிற்கு பெருமகிழ்வோடு ஆசியுரை வழங்குகின்றேன்.

நூல்களானது எமது தொழில்நுட்ப வளர்ச்சியினையும் மிஞ்சிய அரிய பொக்கிஷம். நூல்களை படிக்கும் போது கற்பனை விரிகின்றது. புதிய சுய ஆக்கங்களை வெளிக்கொணர வாசிப்பானது ஊக்கம் அளிக்கின்றது. சமூக சமுதாய வளர்ச்சிக்கு எவ்வளவுதான் தொழில்நுட்பம் சார் தொடர்புசாதனங்கள் காணப்படினும் பத்திரிகை, சஞ்சிகை, நூல்கள், துண்டுப்பிரசுரங்கள், சுவரொட்டிகள் போன்றவற்றினூடான இணைப்பானது மக்கள் மனங்களில் ஆழப்பதியப்படுகின்றன.

இம்முதல் முயற்சிக்கு எமது நூலகருக்கும் நூலக உத்தியோகத்தர்களுக்கும், உறுதுணையான சகல உத்தியோகத்தர்களுக்கும் வாசிப்பினை ஊக்குவிக்கவென நிகழ்த்தப்பட்ட வாசிப்பு மாதகாலத்தினையும், தொடர்ந்தும் நூலகத்தினை சிறப்புற பயன்படுத்தி தமது அறிவுத் தேடலை தீர்த்துக் கொள்ளுமாறும் இச் சிறப்புமலரானது சிறந்த முறையில் வெளியிடவும் தொடர்ந்து இவர்கள் பணிசிறக்கவும் எனது ஆசிகளோடு இறைவனையும் பிரார்த்திக்கின்றேன்.

**திரு. சு. விஜயதாஸ்**
**செயலாளர்**
**பிரதேசசபை**
**வெங்கலச்செட்டிகுளம்**

# முன்னுரை

நூலக தேசிய வாசிப்பு மாதமான ஒக்டோபர் மாதத்தில் "செங்கலம்"எனும் இச் சிறப்பு மலரினை வெளியிடுவதில் பெரும் உவகையடைகின்றேன்.

இது எமது நூலகத்தின் கன்னி முயற்சியே. இச் சிறப்பிதழ் சிறப்புற வெளிவர ஆசியும், ஆக்கமும் நல்கிய அனைத்து உள்ளங்களும், ஊக்குவித்த செயலாளர், மற்றும் நூலக உத்தியோகத்தர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள் ஊழியர்கள் அனைவரதும் ஒத்துழைப்பும் இல்லையேல் இச் சிறப்பு மலரானது வெளிக்கொணரப்பட்டிராது.

இச் சிறப்பு மலரானது தேசிய வாசிப்பு மாத காலத்தில் வாசிப்பினைத் தூண்டி ஊக்குவிக்கு முகமாக வாசகர்கள், மாணவர்கள், கல்வியியலாளர்கள், காரியாலய சேவையாளர்கள் மற்றும் பொது மக்களினதும் நூலகம் பற்றிய கருத்துக்களை அவர்களது எண்ணங்கள், சிந்தனைகளினூடாக அவர்களது நூலகம் தொடர்பான மனவோட்டத்தினை வெளிக்கொணரும் முகமான ஒரு முதல் முயற்சியாகும். தேசிய வாசிப்பு மாதக் காலப்பகுதியில் எமது இச் "செங்கலம்" இதழ் மூலம் ஒரு வழி அமைத்துக் கொடுக்கும் எண்ணத்தோடு எடுக்கப்பட்ட முயற்சியே.

நூலகமானது நூல்கள் மட்டுமன்றி பத்திரிகை, சஞ்சிகைகள், இணையத்தொடர்பு சாதனங்கள், உரையாடல்கள், கருத்தரங்குகள், விழிப்புணர்வு சேவைகள் என பல வழிகளிலும் தகவல்களையும், சேவைகளையும் வழங்கி வருகின்றது. இச் சேவைகளின் பொருட்டு பயன் பெறுனர்களின் வளர்ச்சியினை மேம்படுத்துவதினை நோக்கமாக கொண்டுள்ளது.

வளர்ச்சி அடைந்துவரும் வேகமான தகவல் தொடர்பாடல் எமது நாட்டில் நூலகங்களில் பாரிய வளர்ச்சிப் போக்கினை ஏற்படுத்தியுள்ளது. ஆயினும் நூல்களை வாசிப்பதனூடாக பெறும் பலனை வாசிப்பதனால் மட்டுமே பெற்றுக் கொள்ளமுடியும் என்பது மறுக்க முடியாத உண்மை.

முன்னேற்றமடைந்த பல நூலகங்கள் காணப்பட்ட போதிலும் கிராமப்புறங்களிலும் ஒரு சில பின் தள்ளப்பட்ட இடங்களிலும் நூலகத்தின் பயன்பாடு பற்றிய அறிவின்மை இன்னும் காணப்பட்டே வருகின்றது. இத்தகையதோர் பிரதேசத்தினின்று மக்களது எண்ணத்தில் நூலகம் தொடர்பான விழிப்பினை ஏற்படுத்தும் வகையிலும். மாணவர்களுக்கு ஊக்கமேற்படுத்தும் நல்லெண்ணத்தோடும் எமது நூலகமானது இச் சஞ்சிகையினை வெளியிடுவதனையிட்டு பெரும் மகிழ்வுறுகின்றது.

**செல்வி. முத்துசாமி ரஞ்சிதமலர்**
**நூலகர்**
**பிரதேசசபை, வெங்கலச்செட்டிகுளம்**

# வாசிப்பின் முக்கியத்துவம்

ச. சண்முகதாசன்
சிரேஷ்ட உதவி நூலகர், வவுனியா வளாகம்

**அறிமுகம்:**

இன்றைய நாட்களில் வாசிப்பு மீதான ஆர்வம் மிகவும் குறைவடைந்த நிலையில் காணப்படுகிறது. இதற்குக் காரணம் வாசிப்பு தொடர்பான போதிய தெளிவின்மையே ஆகும். வாசிப்பு சுயவளர்ச்சி மற்றும் பொழுது போக்கிற்கான மிகவும் பிரபலமான வடிவங்களில் ஒன்றாகும். வாசிப்பு சுய கல்விக்கான ஒரு மதிப்புமிக்க வழியாகும். வாசிப்பின் மூலமான மகிழ்ச்சி என்பது வார்த்தைகளில் வெளிப்படுத்த முடியாதது. இது அனுபவத்தால் மட்டுமே புரிந்து கொள்ளக்கூடிய ஒன்று.

வாசிப்பு என்பது புத்தாக்கம், புரிந்துணர்வு, சுய மேம்படுத்தல், மன அமைதி, சலிப்பு தன்மையை நீக்குதல் போன்றவைகளில் எமக்கு உதவுகின்ற ஒன்று.

**வாசிப்பு ஏன் முக்கியமாகிறது?**

உலகில் பல்வேறு சம்பவங்கள் சாதனைகள் கண்டுபிடிப்புக்கள் போன்ற எண்ணற்ற நிகழ்வுகள் நிகழ்கின்றன. இவை பத்திரிகை, சஞ்சிகை மற்றும் இலத்திரனியல் ஊடகங்களிலும் செய்திகளாக வெளிவருகின்றன. இவற்றை எல்லாம் நாம் தெரிந்து கொள்ள வேண்டுமெனில் வாசிப்பு மிகவும் இன்றியமையாததாகின்றது.

ஆபிரகாம் லிங்கன், மகாத்மா காந்தி, அப்துல் கலாம் போன்ற அரசியல் தலைவர்களாயினும் சரி Bill Gates, Barren Buffet, Oprah போன்ற செல்வந்தர்களாயினும் சரி வாசிப்பினால் தம்மை வளர்த்து வளப்படுத்திக் கொண்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

Bill Gates ஒரு வருடத்திற்கு 50 புத்தகங்களை வாசிப்பதாகக் கூறியுள்ளார். Barren Buffet தனது நேரத்தின் 80% ஐ வாசிப்பதற்காக ஒதுக்கி அதிலிருந்து அறிவையும் தகவல்களையும் பெற்றுக்கொள்வதாகக் கூறியுள்ளார். Oprah ஒவ்வொரு மாதமும் ஒவ்வொரு புத்தகம் வாசிப்பதாகக் கூறுகிறார். உலகில் சாதித்த பல தலைவர்கள், சாதனையாளர்களில் ஒரு சிலரின் உதாரணம் இது.

வாசிப்பு சொல் வளத்தை மேம்படுத்த உதவுகிறது. உதாரணமாக நாம் ஒரு புத்தகத்தைப் படிக்கும் போது நமக்குத் தெரியாத பல வார்த்தைகளைத் தெரிந்து கொள்கின்றோம் அந்த வார்த்தைகளின் அர்த்தம் எமக்குத் தெரியவில்லை என்றால் அதை அகராதியில் தேடிக் காண்கின்றோம். இதன் மூலம் நாம் பல்வேறு சொற்களையும் அவற்றின் அர்த்தங்களையும் அறிந்து தெரிந்து கொள்வதோடு எமது சொல்வளமும் விருத்தியடைகிறது.

வாசிப்பு குழந்தைகள் மற்றும் பெரியவர்களின் அறிவு மற்றும் உள வளர்ச்சியிலும் முக்கிய பங்கு வகிக்கிறது. ஏனெனில் அது தகவல்களைத் தக்கவைத்துக்கொள்ளும் திறனை மேம்படுத்துகிறது.

புதிய யோசனைகளைப் பெற உதவுகிறது. புதிய யோசனைகளைப் பெறும்போது புதிய எண்ணங்களைப் பயன்படுத்த முடிகிறது.

வாசிப்பு நம் மன அழுத்தம் அனைத்தையும் மறக்கச் செய்து யோகாவைப் போல நம் மனதுக்கு முழுமையான அமைதியைத் தருகிறது. வாசிப்பு என்பது மேலோட்டமானதாக அல்லாது ஆழமானதாக அமைதல் வேண்டும். கருத்துக்கள் விடயங்களை ஆழமாகவும், நிதானமாகவும் மனதில் பதிந்து கொள்ளும் வண்ணம் ஆறுதலாகவும், பொறுமையாகவும், அமைதியான சூழ்நிலையில் வாசிப்பதன் மூலமே வாசிப்பின் முழுப்பலனையும் அடையமுடியும்.

ஆனால் தற்காலத்தில் பலர் வாசிப்பில் ஆர்வத்தை இழந்துள்ளனர். குழந்தைகள் வீடியோ கேம்ஸ் விளையாட விரும்புகிறார்கள். சில பெற்றோர்கள் அது பெருமையான விடயமென அவர்களை ஊக்குவிக்கிறார்கள். சிலர் தங்கள் தொலைபேசிகளிலேயே அதிகளவு நேரத்தை செலவிடுகிறார்கள். இது ஒரு கவலை தரும் விடயமாகும்.

இணையத்தளங்கள் மூலம் தகவல்களை உடனுக்குடன் அறியக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதும், பத்திரிகைகளை விட கூடிய கவர்ச்சித் தன்மையினை இணையத்தளங்கள் கொண்டிருப்பதும் பத்திரிகைகளுக்குப் போட்டியாக அமைகின்றது. இதனால் இன்று மக்கள் பத்திரிகைகள் வாசிப்பதில் செலவிடும் நேரம், உலகளவில் 25 வீதத்தினால் குறைவடைந்துள்ளதாக குறிப்பிடப்படுகிறது.

மேலும் பத்திரிகைகளை இணையத்தளங்களிலும் வாசிக்கக்கூடிய வசதி காணப்படுவதனால் அச்சுப் பிரதிகளை வாசிப்பவர்களின் எண்ணிக்கை குறைவடைந்து செல்வதனையும், இணையத்தளங்கள் மூலம் செய்திகளை வாசிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதனையும் காண முடிகின்றது. இன்று பலர் தமது தேவை, விருப்பத்திற்கேற்பத் தேவையான தகவல்களை மட்டுமே வாசிக்க விரும்புவதால் இணையத்தளங்களின் மூலம் செய்திகளை வாசிப்பதில் அதிக ஆர்வத்தினைக் கொண்டுள்ளனர். அத்துடன் உடனுக்குடன் தேவையான தகவல்களைப் பெறமுடிகின்றது.

அடுத்து மாணவர்கள் தரமான சஞ்சிகைகள், நூல்கள் என்பவற்றையும் வாசிக்கும் பழக்கத்தினை ஏற்படுத்தல் வேண்டும். தரமான நூல்கள், சஞ்சிகைகள் போன்றவற்றை வாசிக்கும் பழக்கமும் மாணவர்கள் மத்தியில் குறைவடைந்து காணப்படுகின்றது. இதற்குப் பல பொதுவான காரணங்கள் காணப்படுகின்றன.

- போதிய நேரமின்மை, அதாவது மாணவர்கள் பரீட்சையை நோக்கமாகக் கொண்டு பரீட்சைக்குத் தயார்ப்படுத்தும் நூல்கள், பயிற்சிப் புத்தகங்கள், குறிப்புகள் என்பவற்றை மட்டும் வாசிப்பதில் முழு நேரத்தையும் செலவு செய்வதால் பொதுவான நூல்களை வாசிக்க போதிய நேரம் கிடைப்பதில்லை.
- மாணவர்கள் மத்தியில் வாசித்தல் தொடர்பாக விழிப்புணர்வினையும் போதிய ஊக்கத்தினையும், ஆர்வத்தினையும் ஏற்படுத்தத் தவறியமை.
- நூலக வசதியினை பயன்படுத்தும் பழக்கம் காணப்படாமை.

எமது கல்வி முறையும் வாசிக்கும் பழக்கத்தினை சிறுவயதிலேயே மாணவர்கள் மத்தியில் ஏற்படுத்தத் தவறியுள்ளது. பரீட்சையை மட்டும் கருத்தில் கொண்டு கற்றல், கற்பித்தல், பரீட்சை முறைகள் போன்றவை பாடநூல்கள் தவிர்ந்த ஏனைய நூல்களை வாசிப்பதற்குப் போதிய ஊக்கத்தினை வழங்கத் தவறியுள்ளது.

**வாசிப்புப் பழக்கத்தினை எவ்வாறு ஊக்குவிக்கலாம்?**

மாணவர்களின் வாசிப்புப் பழக்கத்தினை பாடசாலையில் மட்டுமன்றி வீட்டிலும் ஊக்குவிப்பது இன்றிமையாததாகும்.

**வீட்டில்**

1. சிறு வயதிலேயே வாசிப்புப் பழக்கத்தை ஏற்படுத்தல், மற்றும் தூண்டுதல். பெற்றோர் சிறுவர் முன்பாக புத்தகங்கள், பத்திரிகை முதலியவற்றை வாசித்தல் சிறுவர்களை வாசித்துக் கூறுமாறு கேட்டல்.
2. சிறு சிறு வசனங்களுடனும் படங்களுடனும் கூடிய புத்தகங்களைச் சிறுவர்களுக்கு வாங்கிக் கொடுத்தல்.
3. சிறுவர்களுக்கு ஏற்றவாறான பத்திரிகை மற்றும் சஞ்சிகைகளில் வெளிவந்த செய்திகள் தொடர்பாக சிறுவர்களுடன் கலந்து பேசுதல்.
4. பாடப்புத்தகங்களுடன் அவர்களின் கலைத்திட்டம், பரீட்சையுடன் தொடர்புடையவற்றுடன் மட்டும் நின்றுவிடாது ஏனைய பத்திரிகை, சஞ்சிகை முதலிய சிறுவர்களுக்கு ஏற்ற தகவல்களைக் கொண்டவற்றையும் வாசிக்க அனுமதித்தல், தூண்டுதல்.

**பாடசாலைகளில்**

1. வகுப்பறையில் சத்தமாக வாசிக்கவிடல், திறமைகளைப் பாராட்டல், வாசிப்பு பேச்சுப் போட்டிகளை நடாத்தி பரிசளித்தல்.
2. சில தலைப்புகளை மாணவர்களிடம் கொடுத்து அது தொடர்பான விடயங்களைத் தேடி கட்டுரைகளை எழுதுவித்தல். (அது தொடர்பான தகவல் மூலங்களை தெரியப்படுத்தல்)
3. கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்து ஒவ்வொரு மாணவனும் தான் வாசித்தவற்றை ஆசிரியர் மற்றும் ஏனைய மாணவர்களுடன் கலந்துரையாடச் செய்தல்.

வாசிக்க கற்றுக்கொள்பவன் வாழவும் கற்றுக் கொள்கிறான். வாசிப்பிற்கு வரம்புமில்லை. எல்லையுமில்லை. இணையத்தினுடாக பல்வேறு தகவல்களை தெரிந்து கொள்ள முடியுமான போதிலும் ஆழமான வாசிப்பின் போது மனதில் உள்வாங்கப்படும் விடயங்களே நீண்ட காலத்திற்கு மனதில் நிலைத்து நிற்பதால் வாசிப்பு பழக்கத்தினை எமது இளம் சந்ததியினரிடையே ஊக்குவித்து ஆரோக்கியமானதோர் எதிர்காலத்தை உருவாக்குவோம்.

**முடிவுரை**

ஆரோக்கியமானதும் அறிவுபூர்வமானதுமான ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப வேண்டுமெனில் பெற்றோரும் ஆசிரியரும் மாணவரிடையே வாசிப்புப் பழக்கத்திற்கான விழிப்புணர்வினை ஏற்படுத்தி அவர்களை வாசிப்பில் ஆர்வமுள்ளவர்களாக மாற்றி ஊக்குவித்தல் அவசியமாகும்.

# உள்ளூராட்சி அமைப்பும் சட்டமும் நிறுவன நற்செயற்பாட்டிற்கு செயற்குழுவின் அத்தியவசியமாகும்

ஓய்வு நிலை செயலாளர்
வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

உள்ளூராட்சி நிறுவனம் ஒன்று என்பது பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சட்டத்தின் வாயிலாக அரசியலமைப்புக்கு ஏற்றவாறு நிறுவப்பட்ட மக்கள் நிறுவனமாகும். உறுப்பினர்களும் அங்கத்தவர்களும், பாராளுமன்றத்தால் விநியோகிக்கப்பட்ட தேர்தல் சட்டத்தின் மூலம் மக்களுக்குச் சேவையாற்றுவதற்காக மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு குழுவினைக் கொண்டு இயங்கும் அமைப்பு ஆகையால் இது ஒரு ஜனநாயகப்படி அமைக்கப்பட்ட அமைப்பாகும்.

அரசாங்கத்தின் சார்பில் பெரும்பாலும் உள்ளூரைச் சார்ந்த சில பணிகளை ஆற்றுவதற்கு உள்ளூராட்சி மன்றம் தாபிக்கப்படுவதோடு பாராளுமன்றத்தாலும் காலத்திற்குக் காலம் அமுலாக்கப்பட்ட கட்டளைச் சட்டங்களினாலும், நியதிகளினாலும் இவற்றின் பணிகள் குறிப்பிடப்பட்டுள்ளன. குறிப்பிடப்பட்ட பணிகளையும், கடமைகளையும் நிறைவேற்றும் பொருட்டு அதே கட்டளைச் சட்டங்களினாலும், சட்டங்களினாலும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு அதிகாரங்கள் கையளிக்கப்பட்டுள்ளன. எனவே, உள்ளூராட்சி மன்றங்கள் சட்ட வலுவானது.

எனவே, மன்றமானது ஒன்றையொன்று சாராது தனித்துவமாக சுயேட்சையாக இயங்குகின்றது உள்ளூராட்சி மன்றங்கள் நிலையான தொடர்ச்சியையும், பொது இலச்சினையையும் வழக்குத் தொடர்வதற்கு சொத்துக்கள் வாங்கவும் விற்கவும் இடையறா வழி உரிமையுடையதாகும்.

உள்ளூராட்சி அமைப்புகளின் தற்போதய நிலையைச் சிந்திக்கும் முன் செயற்பாடுகளை முன்னோக்கி பார்ப்பின் இலங்கை வரலாற்றுக் காலத்தில் இருந்து உள்ளூராட்சி அமைப்பு முறை இருந்ததை மாகாவம்சம் நூல் எடுத்துக்காட்டுகிறது கி.பி.4ம் நூற்றாண்டுகளில் பண்டுகாபயன் ஆட்சி செய்த காலத்தில் கிராமசபைக்கு சமமான ஒரு அமைப்பு முறை இருந்து வந்ததை அந்நூல் மூலம் அறிய முடிகின்றது. "நகரகுத்திக்" என்னும் பெயரில் தற்போதய நகரமுதல்வர் பதவிக்கு சமமான பொறுப்புகளைக் கொண்ட அரசினால் நியமனம் பெற்றிருந்த ஒருவர் தலைமையில் நீர்ப்பாசன வேலைகள், நோய்களுக்கு பரிகாரம் வழங்கும் வேலைகள், சமயம் சம்மந்தமான வேலைகள், நிதி பரிமாண சேவைகள், பாதுகாப்பு வரி சேகரிப்பு, சரணாலயங்கள் பாதுகாத்தல் போன்ற கடமைகளை ஆற்றியமை வரலாற்று நூல்களில் தெளிவு படுத்தி குறிபிடப்பட்டுள்ளன. இது அக்காலத்திலேயே பொது சேவைகள் ஆற்றிய உள்ளூராட்சி அமைப்பு முறையை எடுத்து காட்டுகின்றது. அப்போது நடைமுறைப்படுத்தப்பட்ட சட்டதிட்டங்கள் பெரும்பாலும் வழக்கில் இருந்த சம்பிரதாயங்களையும் பழக்க வழக்கங்களும் மருவி அதற்குக் கட்டுப்பட்டனவாக இருந்தன.

போர்த்துக்கேயரின் ஆட்சிக்குப் பின் ஆட்சி செய்த ஒல்லாந்தர் உள்ளூராட்சித் துறையில் பலசட்டங்களை ஆக்கினர். அது அவர்கள் நிர்வாகம் பரவியிருந்த கொழும்பு, காலி, யாழ்பாணம், மாத்தறை முதலான நகரங்களில் அமுல் செய்யப்பட்டன. பாதைகளுக்கு அண்மையில் வீடுகள் அமைப்பதற்குத் தடுக்கும் 1665 பங்குனி 2ஆம் திகதிய சட்டமும் வீதிகள் அசுத்தப்படுத்துவது சம்பந்தமாக தண்டனை விதிக்கு 1770ம் ஆண்டு ஆவணி மாதம் 10ஆம் திகதிய சட்டமும் இவற்றில் அடங்கும்.

ஓல்லாந்தர் ஆண்ட பிரதேசங்களை 1976ம் ஆண்டு கையேற்று 1815 முதல் முழுநாடும் ஆங்கிலேயர் கைக்குச் சென்று 1833ல் இருந்து 1947வரையான கால கட்டத்தில் பல்வேறு கட்டளைச் சட்டங்கள் உருவாக்கப்பட்டன

இவ்வகையில் உள்ளூராட்சி அமைப்பு முறை ஆரம்பமான நாள் முதல் 1948ம் ஆண்டு சுதந்திரம் கிடைக்கும் வரையான காலப்பகுதியில் பல்வேறு குறைபாடுகளுக்கு மத்தியில் இயங்கி வந்த உள்ளூராட்சி அமைப்பு முறை, சுதந்திரம் கிடைத்த பின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு மேலதிக அதிகாரங்கள் பணிகள் புதிய வருமானங்கள் போன்ற உரிமைகள் சிறப்புரிமைகள் போன்ற எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தி அதன் சார்பில் 1952ம் ஆண்டின் 8ம் இலக்க உள்ளூராட்சி அதிகார பரவலாக்கல் விரிவாக்க சட்டமாக்கப்பட்டது. அத்துடன் உள்ளூராட்சிக்கு தனியாக ஓர் அமைச்சு உருவாக்கப்பட்டது.

1948ல் இலங்கை சுதந்திரம் பெறும்போது கீழ்வரும் நான்கு முறையான உள்ளூராட்சி அமைப்பு முறைகள் மட்டும் இருந்தன

- மாநகர சபைகள் -12
- நகரசபைகள் -39
- பட்டின சபைகள் -83
- கிராம சபைகள் -549

இந்த அமைப்பு முறைகள் அத்தனையும் மக்கள் தொகை அபிவிருத்தி இடப்பரப்பு சமூக பொருளாதார காரணிகள் ஆகியவற்றின் அடிப்படையில் எல்லைகளும் தரங்களும் உருவாக்கப்பட்டன.

இவ்வாறு சட்டங்கள் உருவாக்கப்பட்டு மக்கள் பல எதிர்பார்புகளைக் கொண்டிருந்த போதும் மக்கள் கையில் அதிகாரங்கள் வழங்கப்படாது, அவர்கள் வலுவூட்டப்பட்டனர். இதன் காரணத்தினால் மக்களை மக்கள் ஆளப்படாத நிலை தோன்றி உள்ளூராட்சி அமைப்பு முறையின் தன்மையிலிருந்து விடுபடும் நிலை உணரப்படும் அதனை விலக்கி அதிகார கையளிப்பு வழங்கும் போர்வையில் 1980ம் ஆண்டு 35ம் இலக்க மாவட்ட அபிவிருத்தி சட்ட மூலம் 1981ஆம் ஆண்டு யூன் மாதம் நடைபெற்ற தேர்தல் மூலம் பட்டினசபையின் கிராம சபைகளின் இடையறாத வழி உரிமையாக மாவட்ட அபிவிருத்தி சபைகள் வந்து அதிகாரங்கள் பெறப்பட்டது இந்நிலையில் உள்ள உள்ளூராட்சி அமைப்புக்கள் கீழ்வருமாறு

- மாநகர சபைகள் - 12
- நகரசபைகள் - 39
- மாவட்ட அபிவிருத்திச் சபைகள் - 25

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் உருவாக்கப்பட்ட போதும் கீழ்வரும் காரணங்களினால் அவற்றின் நோக்கங்களை நிறைவேற்றுவதில் கஷ்டங்கள் ஏற்பட்டன.

1. அமைச்சுக்கள் அபிவிருத்திச்சபைக்கு அதிகாரங்கள் பகிர்ந்து அளிக்கத்தவறியமை
2. மேற்பார்வை கட்டுப்பாடு சிறப்பாக அமைக்க முடியவில்லை
3. 632 உள்ளூராட்சி மன்றங்கள் 25 அலுவலகங்களாக மாற்றப்பட்டன.
4. நிதி போதியளவு கிடைக்காமை
5. சேவைகள் குறைவு காரணமாக வரி பெறுவதில் உள்ள கஷ்டம்
6. 7980 பிரதிநிதித்துவம் 397 ஆகக் குறைக்கப்பட்டமை
7. தேசிய அரசியல் உள்ளூர்மட்ட அமைப்பில் கலந்தமை
8. சபையின் நிறைவேற்று குழுதலைவராக மாவட்ட அமைச்சர் இருந்தமை
9. மாவட்ட அபிவிருத்திச் செயலாளராக அரச அதிபர் இருந்தமை

இவைகளை நிவர்த்தி செய்ய முயன்று கிராமசேவையாளர் பிரிவில் கிராமோதய மண்டலமும் பிரதேச செயலாளர் பிரிவில் பிரதேச மண்டலமும் 1981ம் ஆண்டின் 45ம் இலக்கச் சட்ட மூலம் உருவாக்கப்பட்டது.

இவர்கள் அனைத்தும் பலனளிக்காத காரணத்தினால் மாவட்ட அபிவிருத்தி சபைகள் பிரதேச சபைகளாக மாற்றப்பட்டன அந்த வகையில் அமைப்புகள் கீழ்வருமாறு:

- மாநகர சபைகள் - 18
- நகரசபைகள் - 42
- பிரதேச சபை - 570

- வடக்கு கிழக்கில்
    - மாநகர சபைகள் - 03
    - நகர சபைகள் - 09
    - பிரதேச சபை - 65

- வடக்கில்
    - மாநகர சபைகள் - 01
    - நகர சபைகள் - 05
    - பிரதேச சபைகள் - 28

இவ்வகையில் அனைத்து உள்ளூராட்சி மன்றங்களும் கட்டளைச் சட்டங்களினாலும் சட்டங்களினாலும் உருவாக்கப்பட்டு அதே சட்டங்களினால் அதன் நடவடிக்கைகளும் தெளிவுபட்டுள்ளன மாநகர சபைகள் 1947ஆம் ஆண்டின் 29ம் இலக்க 25ஆம் அத்தியாயம் 341 பிரிவுகளையும், நகரசபைகள் 1939ஆம் ஆண்டின் 61ஆம் இலக்க 255ஆம் அத்தியாயம் 237 பிவுகளையும் பிரதேச சபைகள் 1987ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க சட்ட 226 பிரிவுகளையும் கொண்டது.

1987ம் ஆண்டின் 15ம் இலக்க சட்டத்தை எடுத்துக் கொண்டால் சட்டத்தின் 123ம் பிரிவின் கீழ் அனுமதிக்கப்பட்ட பிரிவு 126ல் உள்ளபடியான விடய பொருள் சார்பில் ஆக்கப்பட்ட துணைவிதிகள் துணைச்சட்டங்கள் மற்றும் நூறுக்கு மேற்பட்ட சட்டங்கள் கட்டளைச் சட்டங்கள் என்பனவற்றால் ஆளப்படுகின்றன. இச்சட்டங்களின்பால் ஏற்படுத்தப்படும் சேவைகள் அனைத்தும் நிர்வாக எல்லைக்குள் உள்ள மக்களின் கருவில் இருந்து கல்லறை வரையான சேவைகளை மேம்படுத்த பயன்படுத்தப்படுகின்றன.

பற்பல சட்டங்களினால் நிர்வாகப் பிரதேசத்தின் மக்கள் தேவைகளை இனம் கண்டு செயற்பட இடமளித்திருந்த போதும் பற்பல சவால்களையும் சந்திக்க வேண்டிய நிலை உள்ளூராட்சி மன்றத்திற்கு உண்டு.

பல நாடுகள் மக்களை உள்ளூராட்சி அமைப்பில் செயற்பாடுகளில் பங்கேற்கச் செய்து பெருவரவேற்பு கிடைத்து வேறு பல பணிகள் கையளிக்கப்பட்ட போதும் எமது உள்ளூராட்சி மன்றங்களுக்கு எவ்வித பணிகளோ அன்றி அபிவிருத்திப் பணிகள் சமூக நலன்புரி நடவடிக்கைகளில் உள்ளூராட்சி மன்றங்களுக்கு பங்களிப்பு இல்லாது உள்ளூராட்சி நிர்வாகப் பிரதேசங்களில் அரச நிர்வாகக் கிளைகள் ஆக்கப்பட்டு செயற்பாடு ஆற்றியது உள்ளூராட்சி மன்றங்களையும் தலைவர்களையும் நாட்டின் அபிவிருத்தி மற்றும் சேவையாற்றலில் இருந்து விலக்கி வைத்திருந்ததோடு காலனித்துவ ஆட்சியாளர்கள் ஒதுக்கிக் கொடுத்திருந்த பௌதீக திட்டமிடல் வேலைகளையும் மின்சாரம் நீர்வழங்கல் போன்ற நலன் பெறு சேவைகளையும் வழங்கும் அதிகாரங்கள் மீளவும் அரச நிறுவனங்களுக்கு வழங்கப்பட்டன.

பதவியினை தீர்மானித்தல், ஆட்சேர்புச் செய்தல், நியமனங்கள் வழங்குதல், சம்பளத் திட்டங்களை தீர்மானித்தல் போன்ற காலணித்துவ ஆட்சியாளர்களால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் பறிக்கப்பட்டு அடிக்கடி மாற்றியமைக்கப்பட்டதால் உள்ளூராட்சி மன்றங்கள் பல நெருக்கடிகளையும் சவால்களையும் சந்திக்கின்றன. உள்ளூராட்சி மன்றங்கள் தனது நிர்வாக அதிகார பிரதேசத்தில் சுகாதார அதிகாரசபையாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையாக திட்டமிடல் அபிவிருத்தி அதிகார சபையாக மற்றும் சுற்றாடல் தொடர்பான நடவடிக்கைகளுக்கும் கட்டளை சட்டத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டவாறு செய்யப்படாத ஏற்பட்டுள்ளதோடு இவற்றை குறித்த நிர்வாக பிரதேசத்தில் உள்ள அரச நிர்வாக அதிகாரிகள் நிறைவேற்றுவதும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட தலைமைகள் பொறுப்பளிக்கப்பட்டன. சில கடமைகளையே நிறைவேற்றும் நிலை தொடர்கின்றது.

இந்நிலையை கண்டுணர்ந்து உள்ளூராட்சி மறுசீரமைப்பு சட்டங்கள் உருவாக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற அதிகார தேசத்தில் வாழும் மக்களின் வாழ்க்கை தரத்தை மேம்படுத்துவதற்கு பிரதேச ரீதியான போக்குவரத்துகள், சுகாதாரம், நீர்வழங்கள், சூழல் மாசின்றி வாழ வழிவகுத்தல் முதலிய வளமான வாழ்விற்கு அத்தியவசிய சேவையாற்றும் திட்டங்கள் அமுல்படுத்தப்பட்டன. இவ்வகையில் மக்களின் அடிமட்டத்தில் இருந்து தேவைகள் பிரதிபலிக்க தக்க வகையிலும் பிரதேச நிர்வாக மக்களுடன் ஓர் சிறந்த நல்லுறவை பேணும் வகையில் உறவுகள் பலப்படுத்தும் முறை உருவாக்கப்பட்டுள்ளன. இவ்வகையிலே சட்டத்தில் ஏற்கனவே இடமளிக்கப்பட்டு செயற்பாடின்றி இருந்த செயற்குழுவின்

செயற்பாடு உள்ளூராட்சி மன்றத்தின் நோக்கங்களை முற்றுமுழுதாக நிறைவேற்ற வழிவகுக்கும்.

ஏற்கனவே என்னால் குறிப்பிடப்பட்டது போன்று உள்ளூராட்சி நிறுவனமானது மக்களை மிக அண்மித்த நிறுவனமாகும். இவை அரச நிறுவனமாகும். இவை அரச நிறுவனம் என கருதப்பட்ட போதும் உள்ளூராட்சி மன்றத்திற்கு ஒதுக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றும் போது சில எல்லைக்குள்ளும் கட்டுபாட்டிற்கும் உட்பட்டே செயற்பட வேண்டியுள்ளது. தமது பிரதேசத்திற்குள் மக்களின் சௌகரியத்தையும் வசதிகளையும் சேமநலன்களையும் கவனத்திற் கொண்டு செயற்படுவது அடிப்படை குறிக்கோளாகும். இக்குறிக்கோள் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை நிறைவேற்றும் போது சட்டரீதியான கடமைகளை பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கு பொறுப்புக்கூறக் கடமைப்பட்டுள்ளது. இந்நிலையில் உள்ளூராட்சி மன்றத் தலைவர்கள், அங்கத்தவர்கள், உத்தியோகத்தர்கள் விதிகளையும் சபையின் நிர்வாக பிரதேசத்தில் உள்ள வளங்களையும் நன்கு விளங்கி பயன்படுத்தி அப்பகுதி மக்களது ஒத்துழைப்புடன் அர்பணிப்புடன் செயற்பட்டே சிறந்த உள்ளூராட்சி நிறுவனமாக முடியும்.

இவ்வாறு தலைமைத்துவத்தின் வழிகாட்டலின் கீழ் அலுவலக குறிக்கோள்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவது தொடர்பில் செயற்குழுக்களை ஒருங்கிணைத்தல் அவசியமாகும் பொதுவாக செயற்குழுக்களின் ஏற்றுக்கொள்ளக்கூடிய நடவடிக்கையானது சபைக்குத் தேவையான ஆலோசனை வழங்குதலும் ஏதும் விடயங்கள் தொடர்பாக விடையங்களை அலசி ஆராய்ந்து சிபாரிசுடன் அறிக்கையிடலுமாகும்.

உள்ளூராட்சிமன்ற சட்டங்களிலும் செயற்குழுக்களும் காத்திரமான அலுவலக பணிகள் சட்டத்தினால் வழங்கப்படட்டுள்ளன. இவ் ஒருங்கமைப்பில் முக்கிய இடத்தைப் பெறுவது உள்ளூராட்சி நிறுவனத்தின் சபையும் சபையினால் தெரிவு செய்யப்பட்ட குழுக்களும் நிறுவனத்தின் தலைவரும் நிர்வாக தலைவருமாகும்.

சபையின் நடவடிக்கைகளுக்கு உதவி புரியும் வகையில் செயற்குழு நியமிக்கப்படும் போது ஒரு பகுதி வேலை செயற்குழுவிற்கு வழங்குகையில் சபையின் வேலைபழு குறைந்து சபை வேறு அபிவிருத்தி திட்டங்களுக்கு நேரம் செலவிட முடியும்.

குழு நியமிக்கப்படுவதால் ஒரு அங்கத்தவர் எல்லா விடயங்கள் பற்றியும் பிரயாசப்படுத்துவதை விடுத்து நியமிக்கப்பட்ட குழுக்கள் சபை விடயங்கள் பற்றி பரந்த அளவில் ஆழ்ந்து ஆராய்வதினால் விசேட அறிவை பெற்றுக்கொள்ளமுடியும்.

பல்வேறு விடயங்கள் சம்பந்தமாக சமகாலத்தில் செயற்குழுக்கள் நியமிப்பதால் ஒரே தடவையில் பல விடயம் சம்பந்தமாக செயற்பட முடியும்.

தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவர்கள் மாறி மாறி அங்கத்துவம் வகிப்பதால் நிறுவனத்தின் பல்வேறு பிரிவுகளின் அனுபம் பெற முடியும்.

இதனால் பெற்றுக்கொண்ட அறிவின் மூலம் மேற்பார்வை நிர்வாக நடவடிக்கை இலகுவாகும்.

சபையினால் தீர்மானம் மேற்கொள்ளப்படினும் பல குழுக்களின் சிபாரிசினால் தீர்மானம் இலகுவாகின்றது.

சபையில் தெரிவிக்க முடியாத விடயங்கள் செயற்குழுவின் முன்னிலையில் தெரிவிக்க முடியும்.

பல்வேறுபட்ட சமூகங்களிடையே இருந்து குழுக்கள் அமைக்கப்படுவதால் அச்சமூகங்களின் ஒத்தழைப்பை பெறமுடியும் .

செயற்குழு உருவாக்கம் சார்பாக அமைத்த உருவாக்கும் சட்டத்தின் கீழ் மாநகரசபை கட்டளைச்சட்டத்தின் 29ம் பிரிவில் பிரதேச சபைசட்டத்தின் 12ம் பிரிவிலும் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

மாநகரசபையில் நிதி நிலையியற்குழு ஒன்றும் மற்றும் மேலும் நிலையியற் குழுக்கள் இரண்டும் தெரிவு செய்யப்பட்டு நியமித்தல் அவசியம். தேவைக்கேற்றவாறு வேறுபட்ட விடயங்கள் சம்பந்தமாக மேலும் நிலையியற் குழுக்களை நியமிக்க முடியும்.

நகரசபையில் அதிகாரங்கள் உரிமைகள், பொறுப்புகள் அல்லது சபையின் கவனத்தின் கீழ் சபைக்கு ஆலோசனை பெறும் பொருட்டு செயற்குழுவை காலத்திற்கு காலம் நியமனம் செய்யலாம். செயற்குழு சபையின் அங்கத்தவரைக் கொண்டதும் சபையின் அங்கத்தவர் மற்றும் பிரதேசத்தில் வதியும் மக்களைக் கொண்டதும் நகரசபையைப் பொறுத்தமட்டில் செயற்குழுவை நியமிப்பது கட்டாயம் இல்லை. எனினும் நியமிக்கலாம். பிரதேச சபையில் சபையின் அதிகாரங்கள் உரிமைகள் பணிகள் அல்லது சபையின் கவனத்திற்கு உட்பட்ட விடயங்கள் சார்பாக ஆலோசனை பெறும் வண்ணம் செயற்குழுவை நியமனம் செய்யலாம். நகரசபை போன்று இங்கு இரு வகைப்படும். வேறு விடயப்பரப்பில் ஆலோசனை பெறும் பொருட்டு செயற்குழுக்களை நியமிக்கலாம்.

1. நிதியும் கொள்கை தயாரித்தலும்
2. வீடமைப்பும் சமூக அபிவிருத்தியும்
3. தொழில்நுட்ப சேவைகள்
4. சூழலும் வசதிகளும்

இவ்வகையில் உள்ளூராட்சி நிறுவனங்களினால் செயற்குழுக்கள் அமைக்கப்பட்டு தேவைப்படும் வசதிகளை அளித்து செயற்படும் உள்ளூராட்சி மன்றங்கள் முன்னிலை அடைவது காணக்கூடியதாக உள்ளது.

சபையினால் உள்ளூராட்சி நிறுவன நடவடிக்கைகள் வெற்றிகரமாக செயற்படும் வண்ணம் அங்கத்தவர்கள் அனைவரதும் குடிமக்களதும் பூரண பங்களிப்பை பெறுவதன் மூலம் செயற்குழுக்களை அமைப்பதிலும் அவற்றை நடைமுறைப்படுத்துவதிலும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். மக்கள் நிறுவனம் என்ற வகையில் தமது செயற்பணி குறிகோளை வினைத்திறனுடன் செய்து உள்ளூராட்சி நிறுவனம் மக்கள் சேவையில் மிளிர செயற்குழுக்களை அமைத்தல் அவசியமும் பிரயோசனமுள்ளதாகவும் அமையும் .

# புத்தக தினமும் புத்தக நேசிப்பும்

திரு. சு. விஜயதாஸ்
செயலாளர், பிரதேச சபை செட்டிக்குளம்.

இன்றைய இளைய சமுதாயத்தில் பலருக்கு வாசிப்பதற்கு நேரம் கிடைப்பதில்லையென கூறிக் கொள்கின்றனர். காலம் மாறிப்போகும் நிலையில் அவர்கள் அதனோடு வேகமான மாற்றத்திற்குள் தம்மையும் திணித்துக் கொள்கின்றனர். "கண்டதை கற்க பண்டிதனாவான்" என்பது பழமொழி ஆனால் வசதியான வாழ்வும் அதற்கான உழைப்புமே சமுதாயத்தில் தம்மை உயர்த்தி நிற்கும் என்ற பொதுவான எண்ணத்தினாலேயே பலர் வாசிப்பென்ற அரிய பக்கத்தை தொலைத்து வருகின்றனர். இது காலந்தோறும் எம்மோடு கலந்துவரும் ஒரு பொக்கிஷமாக வாசிப்பை நேசிப்பதனால் ஒருவரது வாழ்க்கையும் அதற்கான அங்கீகாரமும் எப்போதும் நிலைத்து நிற்பதற்கு காரணமாகின்றது.

வாசிப்பினூடாக ஒருவர் தன்னையும் தன் சமூகத்தையும் நேசிக்கவும் அவர்களிற்காக சிந்திக்கவும் தொடங்குகின்றான். அவ்வாறான சிந்தனையோடான மனிதன் வரலாறுகளில் இடம் பெறுகின்றான். அப்படியான மனிதர்களை உருவாக்குவதில் பெரும்பங்கு வகிப்பது வாசிப்பாகும். எந்தவொரு மனிதன் வாசிப்பதில் அலாதியான அக்கறையைக் காட்டுகின்றானோ அவன் வரலாற்றில் இடம்பெற முயற்சி செய்கின்றான் என்பதில் ஐயமில்லை.

ஒரு வடிவமே இல்லாத கல்லை சிற்பியானவன் எவ்வாறு தனது கற்பனையூடு அழகிய சிலை செதுக்குகின்றானோ அவ்வாறானதே வாசிப்பதனால் ஒரு மனிதனது வாழ்வில் ஏற்படும் அழகிய மாற்றங்களும் ஆகும்.

மக்கள் மனதினில் வாசிப்பின் அவசியத்தை உணர்த்தும் வகையில் வருடந்தோறும் ஏப்ரல் 23ம் திகதியானது உலக புத்தக தினமாக கொண்டாடப்படுகின்றது. இத்தினமானது புகழ் பெற்ற இலக்கியவாதியும் ஆசிரியருமான சேக்ஷ்பியர் பிறந்தநாள் ஆகும். இத்தினத்தில் வாசிப்பின் அவசியம் தொடர்பில் பல விழிப்புணர்வு பிரச்சாரங்களும் கருத்தரங்குகளும் அத்தோடு துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள் என்பன மேற்கொள்ளப்பட்டன.

எவ்வாறாயினும் வாசிப்பென்பது அருகிவரும் இக்காலப்பகுதியில் எந்தவகையில் இளைய சமுதாயத்தினரை வாசிப்பு பழக்கத்திற்குள் ஈர்க்கமுடியும் என்பதில் கல்விக்கூடங்கள், நூலகங்கள், பாடசாலைகள் என எல்லாத் தரப்பினரும் பல்வேறுபட்ட முயற்சிகளை மேற்கொள்கின்றனர். ஆயினும் ஒரு சில மாற்றங்களை ஏற்படுத்த முடிந்தளவிற்கு இளையோரது இன்றைய போக்கு தொழில்நுட்பத் துறையில் காட்டும் ஆர்வத்தினை வாசிப்பில் புத்தகத்தில் காட்டுவதில்லை. ஆயினும் எமது சிந்தனையானது எமது சமுதாயத்தை வாசிப்பை நேசிக்கும் பழக்கமுள்ள சமுதாயமாக மாற்ற வேண்டும் என்பதேயாகும்.

முன்னோர்களது வாசிப்பு பழக்கத்தில் ஒரு சிறு அளவேனும் இன்றைய இளையோர் பின்பற்றுவதில் ஆர்வமோ அக்கறையோ காட்டுவதில்லை. இவர்களுக்கு இணையமும் அதனோடான இலகு முறைகளுமே தமது

தலைமுறைக்கு உகந்ததாக, கௌரவமாக எண்ணிக் கொள்கின்றனர். இன்றைய தொழில்நுட்பம் ஒரு வகையில் இலகு தகவலை விரைவில் பெற வழி வகிக்கினும் தத்தமது எண்ணவோட்டங்கள் கற்பனைகளை தாமே அனுபவித்து, வாசித்து தெரிந்து கொள்வதில் உள்ள சுவாரஷ்யத்தையும் சந்தோசத்தையும் தொலைத்து விடுகின்றார்கள்.

ஆயினும் கணனி, லப்டாப், ஐபாட், செல்போன், என இலத்திரனியல் வாசிப்பு சாதனங்களும் இலகுவழிகளில் வாசிக்க வழி வகுத்திருந்த போதிலும் யாரும் பயன்படுத்திக் கொள்வதில்லை எந்த வகையில் வளர்ச்சியுற்று வாசிப்புத் திறனை வெளிக்கொண்டுவரினும் புத்தக வாசிப்பு என்பது மிகமிக இன்றியமையாததும் தனித்துவம் கொண்டதுமாக விளங்குகின்றது.

சமூகத்தை பற்றிய செய்திகள் வரலாறுகள் முன்னோர் வாழ்க்கை முறைகள் போன்றவற்றை நூலகங்களில் உள்ள பல்வேறுபட்ட நூல்களை வாசிப்பதனூடாக அறிந்து கொள்ள வழியேற்படுகின்றது. இன்றைய காலகட்டத்தில் ஊரில் உள்ள நூலகங்களை பயன்படுத்துவதில் அக்கறை காண்பிப்பதில்லை. நூலகத்தின் முக்கியத்துவம் உணரப்படாமையினாலேயே இவ்வாறான சூழ்நிலை ஏற்படுகின்றது. புத்தக வாசிப்பானது நம்மை ஒரு புது உலகிற்கு அழைத்துச் செல்கின்றது. தம்மை தனி உலகத்தில் வாழவைப்பது போன்ற உணர்வினை தருகின்றது.

மனித வாழ்வில் சுவாசிப்பின் தேவைப்பாடு போன்றதே வாசிப்பின் தேவைப்பாடும் என உணரும் தருணம் அவன் தடைகளை தாண்டி அழகிய வெற்றிப்பாதையின் வழியே பயணித்துக் கொண்டிருக்கின்றான் என்பது நிதர்சனமாகின்றது.

புத்தகங்களை வாசிப்பதில் புத்துணர்வு கிடைக்கின்றது. பல்லாயிரக்கணக்கான நூல்களை எம்முன் வைத்துள்ளனர். பல எழுத்தாளர்கள் இவர்களில் ஷேக்ஷ்பியர் உலகில் முக்கியத்துவமான இடம் பிடித்துள்ளார். இவரது பிறந்த தினமே உலக புத்தக தினமாக கொண்டாடப்படுகின்றது. பன்னிரெண்டாம் வகுப்பு வரையே படித்த ஷேக்ஸ்பியரின் தொகுப்புக்களை இன்றும் உலக மக்கள் படிக்கும் அளவிற்கு பிரபல்யமானவை என்பதில் மிகையில்லை.

இவரது பிறந்த தினத்தை ஏன் புத்தக தினமாக கொண்டாட வேண்டுமெனில் 1952ம் ஆண்டு லண்டன் மாநகரை "பிளேக்" எனும் கொடிய நோய் அலைக்கழிக்க தொடங்கியது. அதன்முன் ஏற்பட்ட "சார்ஸ்" நோய் எவ்வாறு சில நகரங்களை முடக்கியதோ அதேபோல் பிளேக் நோயால் முடங்கிப் போனது லண்டன் மாநகரம் அதனால் கிட்டத்தட்ட இரண்டு ஆண்டுகள் அனைத்துப் பகுதிகளும் முடங்கிப் போயின.

லண்டனை தாக்கிய அந்த நோயிலிருந்து மீட்பதற்காக நூல்களை படைக்கும் வாய்ப்பையும் கால அவகாசத்தையும் ஷேக்ஸ்பியருக்கு தந்தது. அந்த இரண்டு ஆண்டுகளில் அவர் அதிகமான நாடகங்களையும், கவிதைகளையும் எழுதிக் குவித்தார் "சோனட்" எனப்படும் புது வகை கவிதைகளையும் அவர்

புனைந்தார். இந்நோய்க்காலம் முடிவுற்ற காலப்பகுதியில் அவரது நாடகங்கள் புத்தகங்களாக வெளிவரத் தொடங்கின. 24 ஆண்டுகள் இலக்கியப் பணியில் அவர் மொத்தமாக 37 நாடகங்களை எழுதினார் என்று சொல்வதை விட இயற்றினார் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவரால் இவ்வாறான இலக்கியங்களை எழுத முடிந்ததென்றால் அவரிடம் காணப்பட்ட வாசிப்பு பழக்கம் தான் அதற்கு முக்கிய காரணம், ஏனெனில் அவர் உணர்ந்து நேசித்து நூல்களை வாசித்தார். நூலகத்திற்கு செல்லக் கூடிய முதல் நபராகவும் நூலகத்தில் இருந்து கடைசியாக வெளிவரக் கூடியவரும் இவராகத்தான் இருப்பார். இவர் பிறந்ததும் ஏப்ரல் 23 ஆம் திகதிதான். இறந்ததும் ஏப்ரல் 23ம் திகதிதான். இக்காரணத்தினாலேயே இவ்விலக்கியவாதியின் பிறந்த தினத்தையே உலக புத்தகதினமாக நிர்ணயித்து உலகம் முழுவதும் கொண்டாடப்படுகின்றது.

புத்தக வாசிப்பினை பற்றி ஜேர்மனியில் விடுதலைக்காக போராடி பல்வேறு தியாகங்கள் மற்றும் சிறை கொட்டடிகளை அனுபவித்து வரலாற்றில் இடம் பிடித்த "மாஜினி" என் மனதிற்கு உகந்த நூல்களை மட்டும் கொடுத்து விட்டு என்னை என் வாழ்நாள் முழுவதும் சிறை வைத்தாலும் நான் கஷ்டப்படமாட்டேன் என்று கூறினார். அந்தளவிற்கு அவர் புத்தகத்தின் மீதும் வாசிப்பின் மீதும் கொண்டிருந்த அன்பே ஆகும்.

இன்று புத்தக வாசிப்பு குறைவு என்றாலும் வாசிப்பவர்களும் பலர் இருக்கத்தான் செய்கின்றார்கள். அவர்களை பற்றி நாம் தெரிந்து கொள்வதோடு பிறரையும் ஆர்வப்படுத்துவதற்கும் புத்தகத்தை வாசிப்பதற்கும் முன்மாதிரியாக கொள்ளலாம். ஒரு பெண் பட்டிமன்ற பேச்சாளராக 1200 தடவைகளுக்கு மேல் பேசியிருந்தும் இவரது பேச்சை கேட்கவென்று தொடர்ந்தும் ஒரு இரசிகர் கூட்டம் இருந்து வந்தது. ஏனெனில் பேச்சாளரிடம் காணப்பட்ட தனிச் சிறப்பு இவர் ஒவ்வொரு மேடையிலும் பேசிய தகவல்கள் வெவ்வேறானவை அத்துடன் மக்களை கவருவதில் வல்லவர் ஒவ்வொரு மேடையிலும் புதுப்புது தகவல்களை பேசி அசத்துவர் இது அவருக்கு உண்டான சிறப்பு இதன் பின்னணியைப் பார்க்கும் நமக்கும் அந்த ஆர்வம் ஏற்படும் என்பதில் எள்ளளவும் மாற்றுக்கருத்து இருக்க முடியாது இது பற்றி அவர் கூறும் போது மாதம் ஐந்தாயிரம் ரூபாய்க்கு புத்தகங்கள் வாங்குகின்றேன், நிறைய படிக்கின்றேன், புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்கின்றேன், இந்த வாசிப்பே ஒரு மேடையில் கூறிய உதாரணம் இன்னொரு மேடைக்கு வராமை ஆகும். இவ்வாறாக நீங்கள் சாதிக்க வேண்டும் என்னும் எண்ணப் போக்கினை கொண்டால் புத்தக வாசிப்பானது வழிகாட்டியாக அமையும் என்பதில் ஐயமில்லை. எனவே புத்தக வாசிப்பினை மேம்படுத்தும் வகையில் உலக வாசிப்பு தினமானது ஊக்கமளித்து வருகின்றது.

**ஒரு தலைமுறைக்கான வரலாற்றுத்தகவல் அது தொடர்பான ஆவணங்கள் சென்றடைவது நூலகங்களின் வாயிலாகத்தான் எனில் மிகையில்லை.**

# நூலக சேவைகள்

மு.ரஞ்சிதமலர்,
நூலகர், பி.சபை, செட்டிக்குளம்

நூலக சேவையானது, நூலகரின் கடமைகளும் பொறுப்புக்களும் சமூகத்தினதும், காலத்தினதும், தேவைகள் கருதி உருவாகிக் கொண்டு வருகின்றது, இம்மாற்றமானது தவிர்க்க முடியாதது அத்துடன் கட்டாயமானதும். தகவல் தொடர்பாடல் சேவைகள் வளர்ச்சிப் பெற்று சென்று கொண்டே இருக்கும் இக்காலப் போக்கில் அது இன்றியமையாத, அத்தியாவசியமான சமூகத்தோடு இணைந்த மாற்றத்திற்குட்பட்டு வரும் ஒருவிடயமாகும்.

நூலகர் தான் கடமையாற்றுகின்ற பிரதேசத்தில் வாழும் மக்களது சமூக, அரசியல், பொருளாதார பண்பாட்டுக் கலாச்சார வளர்ச்சியிலும் கவனம் கொண்டு பலதுறைகளாக தம் கடமைகளை பிரித்து ஆராய்ந்து சேவையாற்றுகின்றவராக இருக்கின்றார்.

*1.சமூகத்தரவுகள்:*

i. சனத்தொகைப் பற்றிய தகவல்கள்
ii. சமூகத்தின் சமூக பொருளாதார நிலைமைகள் பற்றிய தகவல்கள்
iii. வேலைவாய்ப்பின் தன்மை
iv. சமூகத்தின் விருப்பமும் நடவடிக்கைகளும்
v. வீட்டு வசதிகள் சுகாதாரம், வேலை வாய்புக்கள், சட்டஉதவிகள் கருத்தரங்குகள் போன்றவைப் பற்றிய விபரங்கள்.
vi. சேவைகளை வரையரைக்குட்படுத்தாது மக்களில் எவ்விதமான வேறுபாடுகளும் இன்றி முழுச்சமூகத்திற்கும் தனது சேவையினை ஆற்ற வேண்டியது அவசியமாகின்றது.

2.துறை சம்பந்தமான தகவல்களை சேகரித்தல்:

i. பாடசாலை செல்லும் பிள்ளைகளின் எண்ணிக்கை
ii. பாடசாலை செல்லாத பிள்ளைகளின் எண்ணிக்கை
iii. பாடசாலை இடைவிலகிய பிள்ளைகள்
iv. அப்பிரதேசத்தின் கல்வி வசதிகள் பற்றியநிலை
v. குடும்ப சூழ்நிலைமைகள் காரணமாக வேலைக்குச் செல்லும் பிள்ளைகள்
vi. வயது வந்தோர்களின் கல்வியறிவுபற்றியநிலை
vii. தனியொருவர் குடும்பத்தலைவராகக் கொண்ட குடும்பங்கள்
viii. அனாதை சிறுவர்கள் விபரம்

3.சமூக வலைத்தளங்கள் பற்றிய தகவல்கள்:
சமூகத்தின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் அரச, தனியார் மற்றும் ஏனைய துறைசார்ந்த தேவைப்பாடுடைய தகவல்களையும், தரவுகளையும் சேகரித்து வழங்கக் கூடிய வகையில் இருத்தல் வேண்டும்.

4.தகவல் சேகரிப்புநிலையமாகவிளங்குதல்:

பொது நூலகமானது தன் வளங்களை இலகுவான முறையில் பயன்படுத்த கூடியதாக வழிவகைகள் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். சமூகத்தின் தேவைகளை அறிந்து அதன் தேவைகளுக்கு ஏற்றவாறான சேகரிப்புக்களை பலப்படுத்தவும் அபிவிருத்தி செய்யவும் மக்களிடம் இருந்து நன்கொடைகளைப் பெறலாம். பத்திரிகைகளிலிருந்து நாளாந்தம் அத்தியாவசியமான தகவல்களை சேகரித்து வைத்திருத்தல், அத்துடன் நூலக மின்னியல் தொடர்புகள் (வீடியோ, தொலைக்காட்சி, ஓடியோ) என்பவற்றோடு நூலகமானது சமூகவள நிலையமாக இருத்தல் வேண்டும்.

5.சேவை வழங்கும் அமைப்பாதல்:

சமூகத்தில் காணப்படுகின்ற சகல பிரிவினர்கும் சேவையாற்றக் கூடியவகையில் விரிவுரைகள், கருத்தரங்குகள், விழிப்புணர்வு வகுப்புக்களை நடாத்தக் கூடிய வகையினில் இடப்பரப்பினையும், வளங்களையும் கொண்டிருத்தல் வேண்டும்.

6.வாசிப்புப் பழக்கத்தினை ஊக்கப்படுத்தல்:

வாசிப்பினூடு எவ்வாறு மகிழ்ச்சியோடும், சந்தோஷத்தோடும் வாழலாம் என்பதனை உணர்த்தும் வகையில். தாமே சுயமாக நூலினைத் தெரிவுசெய்து, அதனை விரும்பி வாசிக்கும் வகையில் பொது நூலகங்களில் நூல்கள், சிறுவர்களை ஈர்க்கும் வகையில் ஒழுங்குடன் அமைத்துக் கொடுத்தல், அவர்கள் இரசனையோடு இருந்து வாசிக்கும் வகையினில் தளபாடங்களை வடிவமைத்தல். பொது நூலகங்கள் பெரும்பாலும் சிறுவர்களின் வாசிப்பிற்கு அதிக கவனம் செலுத்தும் வகையில் அமையப் பெறல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. சிறுவர் கல்வியறிவின்மையை பார்க்கும் வகையில் முயற்சித்தல், கல்வியறிவுள்ள சமூதாயத்தை உருவாக்கல் வாழ்வியலுக்கான சந்தோஷத்திற்கான வாசிப்பினை உருவாக்கல் ஊக்கப்படுத்தல் என்ற வகையினில் சிறுவர்களுக்கு குழவாக பாடப்புத்தகங்களைப் பார்வையிடுதல், கதை கூறுதல், காட்சிப்படுத்தல், விளையாட்டாக நூல்களில் போட்டிகள் நடாத்துதல்.

எல்லா வயதினருக்குமான நூல்களை அவர்கள் விரும்பிப்பார்க்கும், படிக்கும் வகையில் சேகரித்து வழங்குதல், வளங்களைப் பகிர்ந்து கொள்ளவும், ஏனைய நடவடிக்கைகளுக்கும் பாடசாலை நூலகங்களுடன் இணைந்து செயற்படல். வாசிப்பினை ஊக்குவிக்கும் நடவடிக்கைக்காக சுவரொட்டிப் போட்டிகளை நடாத்துதல், மொழி வளப்படுத்தல் படக்காட்சிகளை காண்பித்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ளல் முற்றும் தொடர்ச்சியாக வாசிக்கும் பழக்கமுள்ள பிள்ளைகளிற்கு ஊக்கமளித்தலும், அவர்களது தேவையினை விளங்கிக் கொள்ளலும், அதற்கான வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தலும்.

7. பயிற்சித்திட்டங்கள்:

தகவல் வழங்குனர்களாக விளங்கும் நூலகர், இலத்திரனியல் தகவல்களின் மூலம் ஒரு செயற்படும் தலைவராகவும், இலத்திரனியல் தகவல்களை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றிய பயிற்சிகளை இலவசமாகவும், திட்டவட்டமானதாகவும், ஒழுங்கானதாகவும் இருத்தலுடன். ஒரு நூலகர் தகவல் தொழில்நுட்ப பயிற்சியாளராகவும் நீடித்த தொடரான கல்விக்கு உறுதுணையான பயிற்சியாளராகவும், சிறந்த தகவல் தொடர்பாளராகவும் விளங்கல் நூலக சேவையின் மிகப் பெரியபொறுப்பாகும்.

நூலகத்தின் சிறந்த சேவையினை வாசகர்க்கு வழங்கும் பொருட்டு பரந்தளவிலான நோக்கோடு சேவையினை வழங்குதல் சிறந்த நூலகத்திற்கான கடப்பாடகும்.

**உலகில் முதன்முதலில் (பண்டைய காலத்தில்) நூலகம் என்ற அமைப்பை உருவாக்கியவர்கள் மொசப்படோமியர்கள் என்று அழைக்கப்பட்ட ஈராக்கியர்கள் தான்.**

# கற்றனைத்தூறும் அறிவு

கவிஞர் நந்தா

"நீரளவேயாகுமாம் நீராம்பல் - தான்கற்ற
நூலளவேயாகுமாம் நுண்ணறிவு"

எனும் ஔவையார் வாக்கு நாம் கற்கும் நூல்களின் அளவுகளுக்கேற்ப, தன்மைக்கேற்ப அறிவு பெருகி பிரவாகிக்கும் என்ற உண்மையை உணர்த்துகின்றது. எனவே நாம் நூல்களைத் தொடர்ந்து கற்க வேண்டும். நூல்களைக் கற்க கற்க அறிவும் ஆற்றலும் பெருகி சிந்தனை விரிவடையும். தேடல் அதிகரிக்கும். அத்தகைய நல்ல நூல்களைத் தேடிக்கற்பது நமது கடனாகும். திருக்குறள், நாலடியார், கொன்றைவேந்தன், ஆத்திசூடி, மூதுரை போன்ற அரிய நூல்கள் நமது வீட்டில் வைத்து பூஜிக்கப்பட வேண்டியவை. அவை மனித வாழ்வை நெறிப்படுத்த படைக்கப்பட்டவை. அவற்றை தெரிந்து படிப்போம் எனும் சிந்தை நம்மில் பலரிடம் இருப்பதில்லை.

திருக்குறள் சுவைஞனுக்கு, அதாவது இலகுமொழியில் சொல்வதானால் வாசகனுக்கு திவ்விய அமிர்தமாய் அமைகின்றது. அத்தன்மையினாலேயே "திருக்குறளில் இல்லாதது வேறெங்கும் இல்லை" என அறிஞர்கள் போற்றுகின்றனர். மணலைத் தோண்டத் தோண்ட நீர் ஊற்றெடுப்பது போல் கற்க கற்க அறிவு ஊற்றெடுத்து எட்டுத்திக்கிக்கும் புகழ் பரப்புகின்றது.

"தொட்டனைத்தூறு மணற்கேணிமாந்தர்க்கு
கற்றனைத்தூறும் அறிவு"

என்கின்றார் வள்ளுவர். எனவே உலகில் யார் பாக்கியசாலி எனில் கல்விக் கேள்விகளினால் நிரம்பப் பெற்றவர் இதற்கு தொடர்ச்சியான நூற் பயிற்சி அவசியம். "வாசிப்பதனால் மனிதன் பூரணமடைகின்றான்" எனும் வரியின் உயிர்ப்பை ஒவ்வொரு மனிதனும் விளங்கிச் செயற்பட்டால் வீடுகள் வெளிச்சமாகும். நாட்டில் கேடுகள் மலர்ந்திடாமல் நன்மைகள் விளைந்திடும்.

நல்ல புத்தகங்களை தேடி வாசிப்பதற்கு மிக உகந்த இடமாக அமைவது நூலகம். நூலகமானது எமது அறிவுக் கண்களை திறக்கின்ற ஆலயமாக திகழ்கின்றது. அங்கே பல அறிஞர்கள் நம்மை அறிஞராக்கும் அவாவில் நூல் வடிவில் காத்திருக்கின்றார்கள் என்பதை நாம் மனம் கொள்ள வேண்டும். உண்மையைச் சொன்னால் வீட்டிற்கோர் புத்தகசாலை தேவை. நல்ல நூல்களைத் தேடி ஆராய்ந்து பொக்கிஷமாய் அவற்றை பாதுகாக்கவேண்டும். அறிவார்ந்த நூல்களில் வாசித்த நல்ல நல்ல, வியக்க தகுந்த பிரமிப்பான விடயங்களை மற்றவர்களும் அறியும்படி செய்து, அந்நூல்களை வாசிக்கும் ஆவலை தூண்ட வேண்டும். ஒருவருக்கு அறிவூட்டுவதென்பது எல்லாப் பணிகளிலும் மிக உயரிய பணியாகும். அந்தக் கைங்கரியம் உங்களால் ஆகட்டும்.

வாசிப்பதனால் அடையும் பேறு அளப்பரியது என்பது அனுபவ வாயிலாக அறிந்தவர்களுக்கு நன்றாக புரியும். எனவே நிறைய நூல்களை வாசித்து அதன் ரசனையை நுகருங்கள். உங்களை பாதித்த விடயங்களை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ளுங்கள். அத் தன்மையில் என்னைப் பாதித்த சில நூல்கள் தொடர்பில் உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகின்றேன்.

கம்பராமாயணத்தின் கவிச்சுவையும் அதன் நுட்பங்களும் தெய்வீக மணம் கமழும் தேன் வார்த்த வரிகளும் என்னை மிகவும் பாதித்தது. ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய நூல். படித்து பயன்பெற வேண்டுமென பணிவோடு கேட்டுக் கொள்கின்றேன்.

அடுத்து திருக்குறள், திருக்குறள் எனது நல்ல ஆசான். சலிக்காமல் வள்ளுவன் அறிவுரையை நான் கேட்டுக் கொண்டிருக்கின்றேன். இந்நூல் எனது வாழ்நாள் முழுவதும் நான் படிக்க விரும்பும் புனித நூல். பெற்றதாயாய், உற்ற நண்பனாய் பலவகையிலும் துணைபுரியும் தெய்வ காடாட்சம் ஒவ்வொரு குறளுக்கும் உண்டென பெருமையோடு சொல்லலாம். நட்பை, அன்பை, கல்வியை, ஒழுக்கத்தை, நல்ல பண்பை, மானத்தை, காதலை ஏன் காமத்தை கூட அவன் சொன்ன விதம் அற்புதம். அடுக்கிச் சொல்லலாம். தெய்வ நூலின் மகிமையை.

அவ்வரிசையில் பாரதியார் கவிதைகள், பாரதிதாசன் கவிதைகள், பண்டிதமணி. சி,கணபதிப்பிள்ளையின் இலக்கிய வழி, அகளங்களின் நறுந்தமிழ், கம்பனில் நான் போன்ற நூல்கள், ஜெயகாந்தன் படைப்புக்கள், புதுமைப்பித்தன் சிறுகதைகள், டானியலின் தண்ணீர் நாவல், மகாத்மா காந்தியின் சுயசரிதை, ஜின்னா ஷரிபுத்தீனின் பண்டாரவன்னியன் காவியம் என இன்னும் நிறைய உண்டு. விரிவு கருதி தவிர்க்கின்றேன்.

இத்தகைய அறிவுக் கருவூலங்களைத் தாங்கி நிற்கும் அரிய தூண்களாக நூல்கங்கள் விளங்குகின்றன. ஆயினும் இன்று நூலகங்களிற்குச் சென்று புத்தகங்களை தேடிப்படிக்கும் பழக்கம் நம்மிடையே காணாமல் போயுள்ளது. இன்றைய நிலையில் பொழுது போக்கிற்காக நூல் படிப்போர் எண்ணிக்கையை கூட விரல்விட்டு எண்ணக் கூடியதாகவே உள்ளது. "நல்ல நூல்கள் படிக்க வேண்டும் எனும் எண்ணம் மழுங்கடிக்கப்பட்டு கைப்பேசியிலும் மடிக்கணனியிலும் முடங்கிப் போயுள்ளது புத்தி ஜீவிகள் சமூகம். இவர்களே இந்நிலையென்றால் சாதாரண பாமர குடிகளை சொல்லத் தேவையில்லை. பிள்ளைகளுக்கு பெற்றோர்களாலேயே இலகுவாக இலத்திரனியல் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டுள்ளமை சமூகத்தின் துர்ப்பாக்கிய நிலையை கோடிட்டுக் காட்டுகின்றது. இன்று "நீலத்திமிங்கலம் விளையாட்டு" பலரது உயிரை காவுகொண்டும் பலரை மிரட்டிக் கொண்டும் இருப்பதற்கு சமூகத்தின் அசண்டையீனமே காரணமாகின்றது. சமூகம் திருந்த வேண்டும். வருங்காலத்தை வழிப்படுத்த வேண்டும். உடம்பும் மனசும் சோர்ந்து போகும் தருணங்களில் நம்மை தூக்கி நிறுத்தும் வல்லமை நல்ல நூல்களுக்கு உண்டென்பதை பெரியவர்கள், சிறியவர்களுக்கு புரியவைக்க வேண்டும்.

சிறார்களுக்கு பெற்றோர்கள் பிறந்தநாள் போன்ற சுபதினங்களில் நல்ல புத்தகங்களை வாங்கிப் பரிசளிப்பது சாலச் சிறந்தது. இச் செயலானது அவர்களை நல்ல வாசிப்பிற்கு இட்டுச் செல்லும். வாழக்கற்போம், வாசிப்பினால் படிப்பாளியாகுவோம். பயன்பல பெறுவோம் என வாசிப்பு மாதம் (ஒக்டோபர்) ஆகிய இம் மாதத்தில் திடசங்கற்பம் கொள்வோம்.

தேங்கிக் கிடக்கும் மடமையைக் கொளுத்த
ஏங்கிக் கிடக்கும் நூல்களை எடுப்போம்.
தூங்கிக்கிடக்கும் மூளையை தூர்த்திடாமல் தட்டி நிமிர்த்தி
பிறரில் தங்கிவாழும் நிலையை விடுப்போம்.
தளர்ந்திடாத மனதைப் பெறுவோம்.
தரணியெல்லாம் புகழ் மணக்க
வீட்டிற்கோர் நூலகம் செய்வோம்.

# அச்சுக்கலை

திரு.ச.பகீரதன்,
நூலக உதவியாளர், பொதுநூலகம்,
பிரதேச சபை, வெ.செட்டிக்குளம்

பதிப்பித்தல் கலையே அச்சிடலாகும். இது எழுத்துக்களையும் படங்களையும் பதிப்பிக்கப் பயன்படும் ஒரு வழி முறையாகும். பலகாலம் காகிதத்தின் மீதுமையைக் கொண்டு அழுத்துவதனூடு அச்சிடலானது செய்யப்பட்டு வந்தது. தற்காலங்களில் வேறு புதிய வழிமுறைகள் பல கையாளப்பட்டு வருகின்றன. நவீன முறை அச்சிடலில் வணிக நோக்கோடு பல தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி அச்சிடல் வகைகள் மேற்கொள்ளப்படுகிறது. இதில் எழுத்து அழுத்த முறை அச்சிடல், இம்முறையானது பரப்பிலிருந்து உயர்த்தப்பட்ட நிலையிலிருக்கும் பிம்பம் மையிடப்பட்டு, அச்சிடப்பட வேண்டிய பரப்பின் (காகிதத்தின்) மீது அழுத்தத்துடன் பதிக்கப்படுகின்றது. இன்னொரு வகையான"ஆழ் முறை அச்சிடல்" முறையானது எழுத்துக்களை குறிக்கும் விதத்தில் வெவ்வேறு ஆழங்களில் அமைக்கப்பட்டுள்ள பள்ளங்களில் இருந்துமை அச்சிடப்பட வேண்டிய பரப்பிற்கு மாற்றப்படுகின்றது. அடுத்து "ஆ..ப் செட் அச்சிடல்" முறையானது அச்சிடப்படும் பகுதி, அச்சிடாப்பகுதி ஆகிய இரண்டும் உயரத்தில் மாறுபடாது. ஆனால் தத்தம் ஈரப்பதனில் மாறுபடுகின்றன.

காகிதத்தில் பிம்பத்தை பதிப்பிக்கும் அல்லது உருவாக்கும் கலை வடிவமானது நகலாக்கம் செய்யப்படுவதற்கான புதிய பல்வேறு தொழில்நுட்பங்களை ஒரு கலைஞரின் நேரடியான கண்கானிப்பினூடே செய்யப்பட்டு வருகின்றது. காகிதமன்று சிலசமயங்களில் துணி, மரப்பட்டை, பிளாஸ்டிக், கற்பாறை என பிறபொருட்களிலும் இது தயாரிக்கப்பட்டு வருகின்றது. சுற்றியுள்ள பகுதி வெட்டியெடுக்கப்பட்டு அதன் காரணமாக புடைத்துக் கொண்டிருக்கும் ஒரு விம்பத்தை கொடுக்கும்" புடைப்பு அச்சு" அச்சுப் பரப்புக்குள் நேரடியாக வெட்டப்படும் "செதுக்கு அச்சு" பிம்பம் ஒன்றைகல் மீது வரையவோ தீட்டவோ பயன்படும் "கல்லச்சுக்கலை" வடிவத்தாள் அல்லது தகடு ஒன்றில் வேண்டிய வடிவம் முன்னதாகவே வெட்டப்பட்டு அந்தத்தாளில் உள்ள துவாரங்கள் வழியாகாமையையோ, வண்ணத்தையோ தெளிப்பதன் மூலம் தயாரிக்கப்படும் "ஸ்டென்சில் அச்சு" முக்கிய தொழில்நுட்ப முறைகளின் வெவ்வேறு வடிவிலான அச்சுக்கலையாகும். புராதனக் கலைகளில் ஒன்றான அச்சுக்கலையில் பல முன்னோடிக் கலைஞர்கள் காணப்பட்டுள்ள போதிலும் 15ம் நூற்றாண்டைச் சேர்ந்த ஷோங்காவர் என்பவரே முதல் முக்கிய செதுக்குக் கலைஞர் என்று அறியப்படுகின்றார். 16ம் நூற்றாண்டில் அல்பிரக்ட் டூரெர் என்பவர் தரமிக்க உன்னத அச்சுக்கள் பலவற்றை உருவாக்கினார் எனவும், 17ம் நூற்றாண்டில் ரெம்பிராண்ட் படைத்த செதுக் கோவியங்களையும் குறிப்பிடலாம்.

17ம் நூற்றாண்டில் ஊகியோ-யே பயிற்சிக்கூடத்தில் செய்யப்பட்ட மரச் செதுக்கல்கள் ஜப்பானிய அச்சுக்கலையானது தொடக்கி வைத்தன. ஹோகுசாய் மற்றும் ஹிரோஷிகே பிரபலமான கலைஞர்களாகக் குறிப்பிடுவர். 18ம் நூற்றாண்டில் முக்கியமாக விளங்கிய மேற்கத்தேய நாட்டு அச்சுக்கலைஞர்களது

பணிகளில் ஹோனோரிடோம்யா மற்றும் பிரஞ்சு பொதுமைத்துவக் கலைஞர்களின் படைப்புகள் சிறப்பிடம் பெறுகின்றன. இவற்றோடு முக்கிய பலகலையை சேர்ந்த கலைஞர்களும் அச்சுக்கலையில் ஆர்வம் காட்ட 20ம் நுர்ற்றாண்டின் புதியபாணிகள் மற்றும் புதிய உத்திகள் என்று வளர்ச்சிகள் பெருகின.

உலகிலேயே பழமையான அச்சிடப்பட்ட நூலாக "சீனடயமண்ட் சூத்ரா" நூல் குறிப்பிடப்படுகின்றது. இது கிழக்கு ஆசியாவில் மிக செல்வாக்குள்ள மகாயான சூத்திரங்களில் ஒன்றாகும். இப்பொழுதும் அழியாமல் உள்ள ஆரம்பகால அச்சுப் புத்தகம் இதுவாகும்.

இப்புத்தகத்தை பதிப்பிக்க நிதியுதவி செய்தவர் வாங்சியே, அவர் பெற்றோர் நினைவாக இலவசமாக விநியோகிக்க இந்நூலை அவர் அச்சிட்டுள்ளார். சீனாவின் கான்சு மாகாணத்தின் டன் ஹீ வாற்குகையில் டைமண்ட் சூத்ராவின் சீன பதிப்பு ஒன்றின் நகலானது ஆரேல் ஸ்டீன் என்பவரால் 20ம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மஹாயனவிம்சிகா கையெழுத்துப்பிரதிகள் கண்டெடுக்கப்பட்டது. இது கி.பி 868 மே 11 தேதியில் அச்சிடப்பட்டது. இது கூட்டன் பர்க்கின் பைபிள் அச்சிடப்படுவதற்கு கிட்டத்தட்ட 586 ஆண்டுகளுக்கு முன்பு நடந்திருக்கிறது. இந்நூலின் ஒரு பிரதி பிரிட்டிஷ் நூலகத்தில் பாதுகாக்கப்படுகின்றது. இந்நூலின் முகப்பில் அச்சிடப்பட்ட ஓவியம் தான் உலகிலேயே அச்சிடப்பட்ட முதல் ஓவிய அட்டைப்படமும் என்பது குறிப்பிடத்தக்கது. இந்நூல் குறித்து பிரித்தானிய நூலகம் "The earliest complete survival of a dated printed book" உலகின் பழமையான முழுமை பெற்ற தேதியிடப்பட்ட அச்சு நூல் எனகுறிப்பிடுகிறது.

அச்சிடல் அல்லது அச்சுக்கோப்பு என்பது பல்வேறு வகையான அச்சு செயல்முறைகளில் எழுத்துருக்களை அமைத்தல் 11ம் நூற்றாண்டில் அச்சுப் பயன்பாட்டிற்காக, மரத்தால் செய்யப்பட்ட எழுத்துருக்கள் சீனாவில் கண்டறியப்பட்டன. நகர்த்தி எடுக்கும் வகையிலான உலோக வர்ப்பிலான எழுத்துருக்கள், 13ம் நூற்றாண்டில் கொரியாவில் கண்டறியப்பட்டன. மீண்டும் இவை ஐரோப்பாவில் ஜோனஸ் குட்டன் பெர்க் என்பவரால் கண்டறியப்பட்டன. அச்சுக்கோத்தல் மற்றும் அச்சடித்தல் பற்றிய வரலாற்றை நோக்கும் போது மேற்குறிப்பிட்ட குட்டன் பெர்க் என்பவர் தான் முதன் முதலில் எழுத்துருக்களைக் கோர்த்து வரிவடிவத்தில் தாளில் அச்சடிக்கும் முறையை உருவாக்கினார் என்பதை அறியலாம்.

1880 இல் வெப்ப உலோக செயல்முறைகள் கண்டறியப்பட்டபின்னர் அச்சுக் கோப்பில் மாபெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. 1884 இல் டைனோடைப் என்பதில் விசைப்பலகையை பயன்படுத்தி எழுத்துருக்கள் ஒவ்வொருவரியும் ஒற்றை உலோகவார்ப்பாக இருக்கும்படி உருவாக்கப்படுகின்றன. 1887இல் மோனோடைப் என்பதானது விசைப்பலகையைப் பயன்படுத்தினாலும் இதில் ஒவ்வொரு எழுத்தும் தனித்தனியாக அமைக்கப்படுகின்றது. ஒளி அச்சுக்கோப்பு 20ம் நூற்றாண்டில் உருவானது. இதில் எழுத்துக்கள் நேரடியாக ஒளிச்சுருள் அல்லது ஒளி உணர்தாளில் உருவாக்கப்படுகின்றது. சுழலும் தட்டு அல்லது உருளை உள்ளது. இதில் எழுத்துக்களுக்கான இடங்கள் அதே அமைப்பில் வெட்டப்பட்டு

இடைவெளிகளாக உள்ளன. இத் துவாரங்கள் வழியாக ஒளியைச் செலுத்தி, உள்புகுந்து வரும் ஒளியை உணர்தாளில் அல்லது சுருளில் விழுமாறு செய்து எழுத்துக்கள் உருவாக்கப்படுகின்றன.

20ம் நூற்றாண்டின் இறுதியில் மென்மேலும் முன்னேறிய வளர்ச்சியினூடு பல அச்சிடல் தொழில்நுட்பங்கள் கணினி வழியூடு மேற்கொள்ளப்பட ஆரம்பிக்கப்பட்டது. கணினியையும் அதனோடு பொருத்தமான மென்பொருள்களையும் கையாண்டு வேண்டுமான வகையில் எழுத்துக்கள், குறியீடுகள் என்பவற்றை சேர்த்து பக்கங்களை வடிவமைத்து தேவைப்படும் கிரா∴பிக்ஸையும் கூட்டி மின்னணுக் கோப்பை உருவாக்கி இக் கோப்பினை லேசர் அச்சு மூலம் தாளுக்கோ படச்சுருளுக்கோ மாற்றம் செய்யப்பட்டு அச்சுப்பதிப்பு மேற்கொள்ளப்படுகின்றது.

ஒருவகை மின்னணுக்கருவி ஒரு கணினியிலிருந்து உரைக் கோப்புக்களையோ, உருவப் படங்களையோ பெற்று அவற்றைக் காகிதத்திற்கோ அல்லது படச்சுருளுக்கோ மாற்றி அச்சிடும் கருவி ஒரு கணினியுடன் நேரடியாகவோ அன்றியும் இணையத்தளத்தின் வழி மறைமுகமாகவோ இது இணைக்கப்பட்டிருக்கலாம் தொடு அச்சுப் பொறிகள், தொடா அச்சுப் பொறிகள் என்று அச்சுப் பொறிகள் இரண்டாகப் பிரிக்கப்படுகின்றன. பெரும்பாலானதொடு அச்சுப்பொறிகள் புள்ளி வரிசை அச்சுப் பொறிகள் ஆகும். இவை அச்சுப் பொறியின் தலைப்பகுதியில் இருக்கும் குறிப்பிட்ட ஊசி பாகங்களின் மூலம் வரிவடிவத்தை உருவாக்குகின்றன.

தொடா அச்சுப்பொறிகள் மூன்று முக்கிய வகைகளர்கப் பிரிக்கப்படுகின்றன.

01. லேசர் அச்சுப் பொறிகள் - லேசர் கற்கைகளைப் பயன்படுத்தி மின்சக்தி ஏற்றப்பட்ட மையை காகிதத்தின் குறிப்பிட்ட பகுதிக்கு கவர்ந்து அச்சிடுகின்றன.
02. மைதெறிப்பு அச்சுப் பொறிகள் - திரவ நிலைமையைத் தெளித்து அச்சிடுகின்றன.
03. வெப்ப அச்சுப் பொறிகள் - மெழுகை அடிப்படையாக கொண்டமையை இடமாற்றம் செய்தோ, சூடாக்கப்பட்ட ஊசிகளைப் பயன்படுத்தியோ பதப்படுத்தப்பட்ட காகிதத்தின் மீது நேரடியாக அச்சிடப்படுகின்றன.

அச்சுக்கலையானது பல்வேறு காலங்களில் பல்வேறுபட்ட மாற்றத்தினூடும் வளர்ச்சிப் போக்கினூடும் இன்று பல பரிமாண அச்சிடல்களை மனங்கவர் விதமாக வாசிக்கத்தூண்டும் வகையில் வெளிக்கொணரப்பட்டுள்ளமையானது அச்சுக்கலையின் வளர்ச்சியையும் தேவைப்பாட்டையும் எமக்கு தெள்ளத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

# நூலகமும் தற்கால சமூகமும்

தயாளினி
நூலக வாசகர்

"நூலகம் இல்லாத ஊரை நான் ஊர் என்று நினைப்பதில்லை" என்ற மேற்கத்தைய அறிஞர் கூற்றுக்கு இணங்க நூலகம் என்பது ஒவ்வொரு ஊருக்கும் அத்தியாவசியமே. ஒரு நூலகம் அதுசார் சூழலில் அறிவார்ந்த சமூகத்தை உருவாக்கும் இன்றைய சமூகம் இதனை கருத்திற் கொள்ளும். அந்தவகையில் நூலகமும் தற்கால சமூகமும் என்ற தலைப்பில் நோக்குவோம். ஒவ்வொரு தனி மனித சிந்தனை வளர்ச்சியில் மிக முக்கிய பங்குவகிப்பது நூல்களேயாகும் நூல்களை ஆழ்ந்து படிப்பவர்களின் சிந்தனை செம்மை பெறுகிறது. புத்தகங்களை அதிகம் படிப்பவர்கள் நாட்டிற்கு விடுதலை பெற்றுதர போராடியுள்ளர்கள். வரலாற்றை மாற்றி எழுதி உள்ளார்கள். சமூக மாற்றத்தின் காரணிகளாக திகழ்ந்துள்ளார்கள் அந்தவகையில் கார்ல் மார்க்ஸ் தனது பிரபல நூலான மூலதனம் எனும் நூலை அக்குவதற்கு அவரது அதீத வாசிப்புத்திறனே காரணம். அத்தோடு அமெரிக்க முன்னாள் ஜனாதிபதியிடம் உங்களுக்கு இன்பமான ஒரு இடத்தின் பெயரை சொல்லுங்கள் எனகேட்ட போது என் மனதிற்கு பேரின்பத்தை அள்ளி வழங்கிய இடம் நூலகமே என்றார்.

புத்தகங்கள் நிறைந்த சூழலில் வளரும் குழந்தைகள் அறிவு நிறைந்தவர்களாக தன்னம்பிக்கை நிறைந்தவர்களாக வாழ்கையில் முன்னேற துடிப்பவர்களாகவும் விளங்குவார்கள். நல்ல புத்தகங்களை படித்துகெட்டு போனவர்கள் யாருமே இல்லை. புத்தகம் படிப்பதை கடமையாகக் கொண்டவர்களும் வாசிப்பை உயிர் என மதிப்பவர்களும் மிக உயர்ந்த நிலை அடைந்தவர்கள்.

தற்காலத்தை பொறுத்தவரை இளம் தலைமுறையினர் எந்தவித இலக்குமின்றி பயணித்துக் கொண்டிருக்கிறார்கள். தமது எதிர்காலம் குறித்த சிந்தனையும் சமூகத்தின் மிதான அக்கறையும் அவர்களிடத்தில் இல்லை. நூல்களைப் படிப்பதில் உள்ள ஆர்வம் தற்கால அதீத தொழிநுட்பம் புரட்சியால் குறைவடைந்து விட்டது.

முன்பொரு காலத்தில் எல்லா ஊர்களிலும் நூலகம் இருந்து அன்றாட செய்திகளை படிக்கவும் தெரிந்து கொள்ளவும் நூலகம் பயன்பட்டது தற்கால தொழிநுட்ப புரட்சியின் உச்சமாக விளங்கும் சமூக வலைத்தளங்களின் வரவு காரணமாக நூலக பயன்பாடு இளைஞர்கள் மத்தியில் அருகி விட்டது. சமூக வலைத்தளங்கள் வெறுமனே செய்திகளைப் பறிமாறிக்கொள்ளும் ஒரு இடம் மட்டுமே. அன்றாட நிகழ்வுகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள இவை பயன்படும். இதனால் அறிவு வளர்ச்சி என்பது நடைபெறுகின்றதா என்பது சிந்தனைக்குரியதே. தற்காலங்களில் பொழுது போக்கிற்காக கூட வாசிக்கும் பழக்கம் இளைஞர்கள் மத்தியில் அருகி விட்டது. இணையத்திலேயே அதிக நேரம் செலவிடுகின்றனர். இது வேதனைக்குரிய விடயமே இந்நிலை தொடருமாக

இருந்தால் அறிவு நிலையில் பூச்சியமான ஒரு சமூகமே உருவாகும் வாய்ப்புகள் உள்ளது.

தற்காலத்தை பொறுத்தவரை ஒவ்வொரு தனிநபர்களிடமும் வாசிப்பு பழக்கத்தை தூண்ட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது. அந்தவகையில் சிறு வயது முதலே வாசிப்பின் முக்கியத்துவம் மற்றும் அவசியம் பற்றி பெற்றோர்கள் மற்றும் ஆசிரியர்களும் பிள்ளைகளிடத்தில் எடுத்துரைக்க வேண்டும். தினமும் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். பரிசுப்பெருட்களாக புத்தகங்களை பரிமாற்றி கொள்ளும் நிலையை ஏற்படுத்த வேண்டும். தினமும் வாசிக்கும் பழக்கம் உள்ளவர்களிடம் பேச்சாற்றல் எழுத்தாற்றல் அத்தோடு கற்பனைதிறன் பிரச்சனைகளுக்கு தீர்வுகாணும் திறன் விமர்சனப் போக்கு என்பன அதிகரிக்கும். அத்தோடு ஒரு புத்தகத்தை வாசிக்கும் நபர் அது தொடர்பான சுவாரஸ்யமான விடயங்களை மற்றவர்களிடம் கூறுவதன் மூலம் மற்றவர்கள் மத்தியில் வாசிப்பு திறனை ஏற்படுத்தலாம். நூல்களை சொந்தமாக கடைகளில் வாங்கி தான் படிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. நூல் நிலையங்களில் தேவையான புத்தகங்கள் எல்லா விடயங்கள் சார்ந்தும் காணப்படுகிறது அறிவுக்குத் தீனி போட விரும்பும் யாராக இருந்தாலும் நூலகங்களை பயன்படுத்தலாம்.

தற்காலத்தில் நூலகங்களை இளஞர்கள் பயன்படுத்தாத காரணத்தால் அவை வெறுமனே நூல்களை தேக்கி வைக்கும் ஒரு இடமாக காணப்படுவதே வேதனைக்குரிய விடயமாகும். எம் சமூகத்தில் இந்நிலைமாற வேண்டும் அனைவரும் நூலகத்தை பயன்படுத்தும் நிலை ஏற்பட வேண்டும்.

# வாழ்வை வளப்படுத்தும் வாசிப்பு

ஐயம்பிள்ளை துஷ்யந்தன்

வாசிப்பு எந்த அளவுக்கு ஒரு மனிதனுக்குத் தேவை என்பதை பல அறிஞர்கள் கூறியுள்ளனர். வாசிப்பு புதிய கருத்துகளை அறிமுகப்படுத்துகின்றது. புதிய சிந்தனையை உருவாக்குகின்றது. நம்மை நாமே உணர்ந்துகொள்ள, எண்ணங்களை மெருகேற்றிக் கொள்ள வாசிப்பு உதவுகின்றது. மற்றவர்களின் வாழ்க்கை வரலாற்றினைப் படிக்கும்போது, நமக்கு அதிலிருந்து கிடைக்கும் அனுபவம் நம் வாழ்வினை செம்மையாக்க உதவுகின்றது. வாசிப்பு, நமக்கு மற்றவர்களிடம் உரையாடும் பயிற்சியைத் தருகின்றது. நம்முடைய கற்பனையை உயர்த்துகின்றது.

நல்லநூல்களைத் தேடித்தேடிவாசியுங்கள். உடலுக்கு எப்படி நாம் உடற்பயிற்சிசெய்கின்றோமோஅதுபோல, மனதிற்கு சிறந்த பயிற்சி நல்ல நூல்களை வாசிப்பது மட்டுமே. நல்ல புத்தகம் நல்ல நண்பன் என்பார்கள். வாசிப்பு மட்டுமே மனிதனின் அறிவை விரிவாக்கும், குழம்பிய மனதினை தெளிவாக்கும், ஒரு நிலைப்படுத்தும். மனிதனைப் போலத்தான் புத்தகமும் ஒரு வாழ்வின் தோற்றமாகும், அதற்கும் உயிருண்டு, அதுவும் பேசும். மனிதன் இதுவரை படைத்த, இன்றைக்கும் படைத்து வருகிற மற்ற பொருட்கள் போன்ற அளவுக்கு அது ஒரு "பொருள்" மட்டும் அல்ல என்றார் புகழ்பெற்ற "தாய்" காவியம் இயற்றிய மாக்சிம்கார்க்கி.

ஒரு எழுத்தாளனின் கூர்மையான எழுத்துக்கள், அடிமையாக இருக்கும் ஒரு சமூகத்தை தட்டி எழுப்பவல்லது. அதனால் தான் "புரட்சிப்பாதையில் கைத்துப்பாக்கிகளை விட பெரிய ஆயுதங்கள் புத்தகங்களே!" என்றார் லெனின். நூல்கள் மிகப்பெரிய புரட்சியை ஏற்படுத்த வல்லவை. அதனால் தான் நாளந்தா பல்கலைக்கழகமும், யாழ்ப்பாண நூலகமும் தீக்கிரையாக்கப்பட்டன. 24 மணி நேரத்தில் குறைந்தது ஒரு மணிநேரமாவது நல்ல நூல்களைப் படிக்க ஒதுக்குங்கள். ஒரு புத்தகத்தை எப்படி படிக்க வேண்டும் என்று ஆங்கிலதத்துவ ஆசிரியர், எழுத்தாளர் பிரான்சிஸ் பேக்கன் (Francis Bacon ) கூறும்போது, "Some books are to be tasted, others to be swallowed, and some few to be chewed and digested."என்பார். அதாவது "சில புத்தகங்களை சுவைப்போம். சிலவற்றை அப்படியே விழுங்குவோம். சில புத்தகங்களை மென்று செரிமானம் செய்வோம்!".

எவ்வளவு ஆழமான கருத்து என்று சிந்தித்துப் பாருங்கள். சிலநேரங்களில்நம் மனது நொந்து போகும், என்ன வாழ்க்கை இது என்று கூட எதிர்மறை எண்ணங்கள் தோன்றும், அப்போதெல்லாம் ஒரு புதிய நூலினை வாங்கி வாசிக்கத் தொடங்குங்கள் என்கின்றார் இங்கர்சால். குறிப்பாக ஒரு நல்ல எழுத்தாளராக இருக்க நிறைய வாசிக்க வேண்டும். வாசிப்பு இல்லாமல் எழுத முடியாது என்பதுதான் உண்மை.

இந்த உலகில் பெரிய அறிஞர்கள், தத்துவஞானிகள் என்று அறியப்பட்டவர்கள் அனைவரும் சிறந்த நூல்களைப் படித்தனர், அதனால் சிறந்த நூல்களைப் படைத்தனர். கிரேக்க நாட்டின் அறிஞர் சாக்ரடீஸ் தன்னை நஞ்சைக் கொடுத்து கொல்லும் நிலையிலும் சிறைச்சாலையில் இறுதி மூச்சு அடங்கும் வரை படித்தார். லிபியா நாட்டின் உமர் முக்கர் தூக்குக்கயிறு அவர் கழுத்தை இறுக்கும் வரை படித்துக்கொண்டிருந்தார்.

1969-இல் மருத்துவமனையில் அறுவை சிகிச்சைக்காக காத்திருந்த அண்ணாவிடம் மருத்துவர், "நாளை உங்களுக்கு அறுவைசிகிச்சை" என்று கூறியபோது, இரண்டு நாட்கள் அறுவை சிகிச்சையை தள்ளி வைக்கவும் என்றார். ஏன் என்று கேட்டதற்கு நான் ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருக்கின்றேன், அது படித்து முடித்தவுடன் அறுவைசிகிச்சை செய்து கொள்கின்றேன் என்றார். கன்னிமரா நூலகத்தில் அண்ணா அவர்கள் கைபடாத நூல்களே இல்லை என்று கூறுவார்கள். அந்த அளவுக்கு நூல்கள் வாசிப்பிற்கு அண்ணா முக்கியத்துவம் தந்தார். தமிழ் நாட்டின் அறிஞராகத் திகழ்ந்தார்.

நூல்களை எவ்வாறு படிக்க வேண்டும் என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்கள் மிக அழகாகக் கூறுவார்கள்.

நூலைப்படி - சங்கத்தமிழ்
நூலைப்படி - முறைப்படி
நூலைப்படி காலையிற் படி கடும்பகல் படி
மாலை, இரவுபொருள்படும் படி
நூலைப்படி

கற்பவை கற்கும்படி
வள்ளுவர் சொன்னபடி
கற்கத்தான் வேண்டும் அப்படிக்
கல்லாதவர் வாழ்வதெப்படி?

அறம்படி பொருளைப்படி
அப்படியே இன்பம்படி
இறந்த தமிழ் நான்மறை
பிறந்ததென்று சொல்லும்படி

அகப்பொருள்படி அதன்படி
புறப்பொருள்படி நல்லபடி
புகப்புகப்படிப்படியாய்ப்
புலமை வரும் என்சொற்படி

சாதி என்னும் தாழ்ந்தபடி
நமக்கெல்லாம் தள்ளுபடி
சேதி அப்படி தெரிந்துபடி
தீமை வந்திடுமே மறுபடி

பொய்யிலே முக்காற்படி
புரட்டிலே காற்படி
வையகம் ஏமாறும்படி
வைத்துள்ள நூற்களை
ஒப்புவதெப்படி

தொடங்கையில் வருந்தும்படி
இருப்பினும் ஊன்றிப்படி
அடங்கா இன்பம் மறுபடி
ஆகம் என்ற ஆன்றோர் சொற்படி

எந்த வீட்டில் நூல் நிலையம் இருக்கிறதோ, அந்த வீட்டில்தான் ஒளிவிளக்கு இருக்கிறது என்றார் பிளாட்டோ. அந்தவகையில், குழந்தைகளுக்கு சிறுவயதில் இருந்தே வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்துங்கள். நல்ல நூல்களைப் படிக்க ஊக்கப்படுத்துங்கள். பாடநூல்கள் தாண்டி நல்ல கதைகள், கட்டுரைகள், அறிஞர்களின் வாழ்க்கை வரலாறு இவற்றை படிக்கச் சொல்லுங்கள். குழந்தைகள் நுண்ணறிவு கொண்டும், பொது அறிவு கொண்டும் வளர்வார்கள் என்பதில் ஐயமில்லை.

(படித்ததில் பிடித்தது)

# வாசிப்பும் சமூக மேம்பாடும்

மு.சிவஞானம்
சனசமூச அபிவிருத்தி உத்தியோகத்தர்

மக்களால் மக்களுக்காக மக்களினது ஆட்சியே உள்ளூராட்சி ஆகும். உள்ளூராட்சி மன்றம் ஒரு குட்டிப் பாராளுமன்றம். அவ்வாறான உள்ளூராட்சி மன்றமே வாசிப்பு மாதத்தினை கொண்டாடுகின்றது. அந்தவகையில் உள்ளூராட்சி மூலம் வழி நடத்தப்படுகின்ற சனசமூக நிலையங்களே உள்ளூரின் சமூக மட்ட மையமாகும்.

இந்த மையத்திலிருந்தே வாசிப்பு பழக்கத்தை ஆரம்பிக்க வேண்டும் ஏனெனில் மாணவர்கள் மட்டுமல்ல வயோதிபர்கள், பெண்கள் இளைஞர்கள் சிறுவர்கள் எல்லோரும் செல்லுமிடம் சனசமூக நிலையமே ஒவ்வொரு கிராம உத்தியோகத்தர் பிரிவிலும் உள்ள சனசமூக நிலையங்களில் நூலகங்கள் அமைப்பது தற்போதைய நிலையில் முக்கிய தேவையாகும்.

இன்றைய இளம் சமுதாயம் அல்லது இளைஞர்களின் செயற்பாடுகள் தவறான பாதையில் செல்வது வேதனையளிப்பதாக அமைகின்றது. குறிப்பாக வாள்வெட்டு, கஞ்சா, குடிபோதை, பாலியல் துஸ்பிரயோகம், எனப்பலவாறு இடம்பெற்றுக் கொண்டிருப்பதை நாம் அறிய முடிகின்றது. இவர்களுக்கு நாம் சரியான வழிகாட்டாவிடில் எமது சமூகம் எங்கையோ முட்டிமோதப் போகின்றது. இதனை உடனடியாக நிறுத்தவேண்டும்.

அந்த நடவடிக்கையில் ஒன்றுதான் வாசிப்பு பழக்கம் ஆகும். ஆன்மீக பாடங்கள் சம்பந்தமான புத்தகங்கள், நல்லகதைப் புத்தகங்கள், கணணி அறிவு பற்றிய புத்தகங்கள், பொது அறிவுப் புத்தகங்கள்,விஞ்ஞான கண்டுபிடிப்புப் புத்தகங்கள், விவசாய அறிவுப் பற்றிய புத்தகங்கள், போன்றவற்றை கொள்வனவு செய்து சனசமூக நிலையத்தின் கண்காணிப்பில் நூலகங்களை அமைத்தல் வேண்டும்.

குறைந்தது இரண்டு மணித்தியாலங்கள் நூலகத்திற்கு 10 வயதிற்கு மேற்பட்ட அனைவரையும் வரவழைத்து முதலில் தொலைக்காட்சி திரையில் நல்ல நகைச்சுவை நிகழ்ச்சிகள் விளையாட்டுகள் மகாபாரதம் இராமாயணம் போன்ற காட்சிகளை அவர்களுக்கு காண்பிக்க வேண்டும்.

அத்துடன் உள்ளகவிளையாட்டுக்களான கரம் போர்ட் Table Tennis, போன்ற விளையாட்டுக்களையும் விளையாட விடலாம் பாடல் பாடக்கூடிய ஆற்றல் உள்ளவர்களை பாடவைத்து இசையையும் அவர்களை கொண்டே இசைக்க விடலாம்.

இதன் மூலம் எல்லோரையும் உள்வாங்கி படிப்படியாக சிறிது நேரம் வாசிக்க விடவேண்டும் பின்னர் வாசிப்பு நேரத்தை அதிகரிக்க செய்யலாம். நல்ல விடயங்களை வாசிக்க விட்டு அவர்களை கொண்டே ஒருவரை ஒருவர் வினாக்களை கேட்டு விடையளிக்க செய்யவிடலாம். வாசிப்பில் அதிக ஆர்வமுள்ளவர்களை வழி நடத்தவேண்டும் வாசிப்பதில் பிடித்த விடயங்களை தெரிவு செய்து பட்டிமன்றங்களை நடாத்த வேண்டும். நல்ல குடும்பக்கதைகளையும் குடும்பங்களை வறுமையிலிருந்து எப்படி மீட்டெடுப்பது போன்ற சிறுகதைகளையும் பத்திரிகைகளை கொண்டு வாசித்து அறிய விட வேண்டும்.

வறுமையிலிருந்து ஆபிரகாம் லிங்கன் எப்படி முன்னேறினான் என்ற வரலாற்றை வாசிக்க விட வேண்டும் அறிஞர் அண்ணா, பாரதியார், காந்தியடிகள், போன்றோரின் வரலாறுகளை வாசித்து அறிய விடவேண்டும். தொடர்ச்சியாக வாசிக்க முடியாத விடத்து உள்ளக விளையாட்டுக்களை விளையாட விட வேண்டும் கணணி விளையாட்டுக்களை விளையாடுவதற்கான ஏற்பாடுகளை செய்துகொடுக்கலாம். இசைக்கச்சேரிகள் போன்ற செயற்பாடுகளை ஏற்படுத்தலாம்.

சனசமூக நிலையத்தினால் ஒரு வகுப்பினை கிராமத்தில் படித்த இளைஞர்கள் மேற்படிப்பு oL/AL/ படித்த மாணவர்கள் ஆசிரியர்களை கொண்டு நடாத்தலாம் ரியூசன் வகுப்பில் வாசிப்பு நிகழ்வு 1 மணித்தியாலம் என அறிவித்து ஒவ்வொரு நாளும் வாசிக்க விடலாம். 30 நிமிடம் ஆன்மீக அறிவுரை புகட்டலாம் 15 நிமிடம் யோகாசனம் பயிற்சி வழங்கலாம். அத்துடன் தியானபயிற்சி 10 நிமிடம் நடத்தலாம். காலையில் ரியூசன் வகுப்பிலே ஆன்மீகமும், யோக்ாசனமும் மாலையிலே வாசிப்பும் நடாத்தலாம்.

இவ்வாறு வருடம் முழுவதும் செய்கின்ற போது வாசிப்பில் ஆர்வம் ஏற்படும் தொடர்ந்து வாசிப்பை மட்டும் செய்யும் போது மக்கள் எங்கும் வரமாட்டார்கள் மேற்கூறிய எல்லா விடயங்களையும் இணைத்துக் கொண்டு வாசிப்பையும் ஒரு பிரிவாக கொண்டுசெல்லும் போது சோர்வடையாது உற்சாகமாக செயற்படுவார்கள்.

பொதுவாக வாசிப்பில் ஈடுபடுவதால் மனிதனின் சிந்தனைதிறன் ஒருங்கிணைக்கப் படுகின்றது. மனம் அங்குமிங்கும் அலைபாயாது அமைதியாகின்றது. சிந்தனைத் திறன் மேம்படுகின்றது. மனதில் சஞ்சலம் பதற்றமில்லாமல் அமைதியாகின்றது. புதிய கண்டுபிடிப்புக்கள் உருவாகுவதற்கான சிந்தனை மேம்படுகின்றது. சமூகத்தை வழி நடாத்துவதற்கான ஆளுமை ஊற்றெடுக்கும் சமூக முரண்பாடுகளுக்கு நேரம் இருக்காது ஆன்மீகத்தை வாசிக்க கேட்கமனம் தெளிவடையும் தியானத்தில் ஈடுபடுவது துணிவைத்தரும் மனக் குழப்பமில்லாமல் செய்யும் சமூக ஒற்றுமை வலுவூட்டப்படும்.

ஒவ்வொரு வீட்டிலும் இரவு நேரங்களில் உதாரணமாக 9.00 மணிதொடக்கம் 10.00 மணி வரை தாய் தந்தை பிள்ளைகள் வாசிப்பில் ஈடுபடவேண்டும் நல்ல விடயங்களை வாசிக்க வேண்டும் வீட்டில் ஒரு நூலகத்தை வைத்திருக்கலாம் குடும்பமாக இருந்து சின்னத்திரை பார்ப்பதை கைவிட வேண்டும் அச்சின்னத்திரைகளில் குடும்பச் சண்டைகளை பார்ப்பதன் மூலமாக குழந்தைகளது மனதில் பழிவாங்கல் எண்ணம் ஏற்படுகின்றது. எந்தக் குழந்தையும் மண்ணில் பிறக்கையில் நல்ல குழந்தைகளே அவர் நல்லவரவாதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே என கவிஞர் ஒருவர் பாடியுள்ளார் இதிலிருந்து பெற்றோர்களின் பங்களிப்பு எளிதில் புரிகின்றது. எல்லாவற்றிற்கும் மேலாக தமது கிராமத்தை நேசிக்கும் மனநிலை ஒவ்வொரு கிராம வாசிக்கும் சனசமூக நிலையம் வளர்த்து எடுக்க வேண்டும். இது எமது கிராமம் எமது வீடு எமது பாடசாலை எமது வைத்தியசாலை எமது மக்கள் என்ற எண்ணம் ஒவ்வொருவரினதும் மனதில் விதைக்க வேண்டும் அவ்வாறு விதைத்தால் வாள்வெட்டு, கஞ்சா, குடி, பாலியல் துஸ்பிரயோகம், குடும்பத் தகராறு என்பன மறைந்து போய் தமிழ் சமூதாயம் பழைய பண்புள்ள சமூகமாக மேம்படும்.

# மாணவர்களின் மாண்பும் நூலகத்தின் பண்பும் (கட்டுரை 1ம் இடம்)

முஹமட் மாஸீர் சமீஹா பேகம்,
வ/தரூல் உலூம் முஸ்லிம் வித்தியாலயம்

மாண்பெனப்படுதல் பாடறிந்து ஒழுகலே என்று கூறுவர் அறிஞர் அதாவது திருந்திய உணர்ச்சி, கல்வி, கலை, சமயம், இவைகளின் ஒன்றினைந்த கூட்டே மாண்பு எனப்பொருள்படும். இங்குமாணவரின் மாண்பு எனப்படுவது மாணவரை திருந்திய உணர்ச்சி, கல்வி, கலை, சமயம், போன்ற விடயங்களில் சிறப்படையச் செய்தலையே சார்ந்து நிற்கின்றது. இப்பூவுலகில் ஒரு மனிதன் புகழுடன் வாழ்வானாகில் அவன் ஒரு சிறப்பிற்குரியவனாக கொள்ளப்படுகின்றது. இவ்வாறு சிறப்பிற்குரிய ஒரு மனிதனை உருவாக்குவதில் நூலகத்தின் பண்புகள் பங்காற்றுகின்றது. என்று கூறுவதில் மிகையாகாது.

"நூலளவே ஆகுமாம் நுண்ணறிவு" என்று கூறுகின்றார் ஔவையார் நாம் எந்த அளவு படிக்கின்றோமோ அந்த அளவு அறிவு வளர்ச்சியடையும். "முதுகெழும்பாக திகழ்வது நூலகமே" ஒரு நாட்டிலுள்ள நூலகங்களின் எண்ணிக்கையைப் பொறுத்துத்தான் அந்நாட்டில் உள்ள அறிவு, ஆற்றல்கள் அளவிடப்படுகின்றன. என்கின்றார் தத்துவ அறிஞர் நூலகங்கள் புத்தகங்களின் உறைவிடம் மட்டுமல்ல அறிஞர்களை உருவாக்கும் சரித்திரச் சான்றுகளாகும்.

பிரான்சிஸ் பேக்கன் என்ற அறிஞர் "வாசிப்பு ஒரு மனிதனை முழுமையாக்குகின்றது என்கின்றார். கல்வி அறிவை விசாலிக்க விரும்பும் சமூகத்திற்கு சிறந்த ஓர் இடமாக நூலகம் காணப்படுகின்றது. இதையிட்டே "ஆபத்து இல்லாத ஒரு நல்ல நண்பன் நூல்" என்று சிறந்த நண்பனுக்கு உவமிக்கப்படுகின்றது.

"ஆறு இல்லாத ஊருக்கு அழகுபாழ்" என்பது பழமொழி" நூல்நிலையம் இல்லாத ஊருக்கு அறிவு பாழ்" என்பது புதுமொழி இதனால் தான் நம் முன்னோர் ஊர் தோறும் நூலகங்கள் தோன்ற வேண்டும் மாந்தர் உள்ளங்களை சீர்படுத்தி செம்மையுறச் செய்ய வேண்டும் என சொல்லப்படுகின்றுது.

ஒவ்வொருவரும் பல நூல்களையும் ஒரே இடத்தில் படிப்பதற்கு நூலகம் பெரிதும் துணை புரிகின்றன. நாட்டில் அறியாமை என்னும் இருளினை அகற்றி மக்களது மனக்கவலையை மாற்றி அறிவொளி புகட்டி மகிழ்ச்சியை அளித்திட நூலகம் பெரிதும் துணைபுரிகின்றது.

சுருங்கக் கூறின் நூலகம் ஓர் ஆய்வுக்கருவூலம் படிக்கும் ஆற்றலும் படிக்க வேண்டுமென்ற ஆர்வமும் அக்கருவூலத்தை திறக்கும் சாவிகள் என்று கூறுகின்றார். ஆங்கில அறிஞர் ரஸ்கின் படிக்க படிக்கத்தான் அறிவு வளரும் என்கின்றார். இதையிட்டேநம் முன்னோர் "பாடை ஏறினும் ஏடது கைவிடேல்" ஆகவே ஊருக்கு வெளியே உலகம் இல்லை என்று எண்ணும் ஊர்த்தவளையாக உலா வராமல் மாணவர்களுக்கு உலகை காட்டும் கண்ணாடியாக நிற்கும் நூலகத்தின் பண்புகளையும் நாமும் சரிவரக் கடைப்பிடித்து மாண்புமிக்க மாணவராக திகழ வேண்டியவனாக விடைபெறுகின்றேன்.

# வாசிக்க வாசிக்க வானமும் வசப்படும் (1ம் இடம் பெற்ற கவிதை)

நௌபர் பாத்திமா றுஸ்தா,
தருல் உலூம் முஸ்லிம் வித்தியாலயம்.

பக்குவமாய் ஏடெடுத்து
எண்ணெழுத்து சேர்த்து கூட்டி
பூவிதழால் பொங்கிவழிந்து
பூரணமாய் வெளிப்படுவதே
வாசிப்பு
ஆளில்லா - தனியிடத்தில்
ஆழ் மனமோ திறந்துகொள்ள
உள்ளமதில் பேரொளியாய்
அமைதி வாசிப்பு ஆர்ப்பரிக்கும்

இந்தப் பரந்து விரிந்த
பாரும் ஒரு பழமையான ஏடாகும்!
அதை நாம் வாசித்தால் இலட்சிய இரத்தம் சூடாகும்

வாசித்து கற்றுக்கொள்வதில் - நீ
குழந்தை போல் இரு- அதற்கு
அவமானம் தெரியாது - அழுது
முடித்து மீண்டும் எழுந்து நடக்கும்
ஒவ்வொரு நாளிதழும் - தன்னை
வாசி என்கிறது - என்னை
வாசித்து - நீ நிகழ்காலத்தை
தெரிந்து கொள் - என்கின்றது.

சுற்றிவரும் - உலகோ
என்னை வாசி என்கின்றது - ஊமை....
உள்ளமோ வாசிக்க யோசிக்கின்றது....
மிடுக்கான எண்மிய நாகரிகத்தில்....
பரந்த பாரையும் - விரிந்த
விண்ணையும் நீ - நேசி
அதைக் கொண்டு எப்படி - வாசிக்க
கற்கலாம் எனயோசி

பூங்காற்றை சுவாசித்தால் - வரும்
நறுமணம் - அறிவுக்காற்றை
சுவாசித்தால் பெருகி - ஓடும்
அஞ்ஞானம் என்பதை உணர்ந்திடா
மானிடா!

உலகை நேசித்தால் வாழ்வு உதயமாகும்
நிறைய வாசித்தால்
அறிவு பூரணமாகும்
கணணிகள் பெருகிவிட்ட
நவீன உலகில் - வாசிப்பு
என்பது யாசிப்பாய் இருக்கிறது

எழுத்தறிவை உச்சத்தில் வைத்திருப்பது
வாசிப்பு தான் - ஆனால்
அதை துச்சமாய் மதிக்கிறது
இன்றைய சமூகம்

வாசித்தால் உண்டாகும் - இரசனை
அதில் இன்று - யாரும்
காட்டுவதில்லை - கரிசனை

வாசிப்பு உனது நுரையீரலின்
சுவாசிப்பு ஆகட்டும் - அதனால் விடியும் நாளை
நன்றே உதயமாகட்டும்

நீல் ஆம்ஸ்ரோங்கிற்கோ - விண்ணைத்
தொடவிண்கலம் தேவைப்பட்டது
வாசிப்பு ஒன்று போதும் - நான்
விண்ணைத்தொட்டிட

வாசிப்பு என் உயிர் மூச்சாய்
இருக்கும் காலமெல்லாம்
நான் - அறிவுக்காட்டில்
இளந்தென்றலாய் - வீசிக்
கொண்டிருப்பேன் .....

வாசிக்க வாசிக்க - வானமும்
வசப்படும் - என்பதை
இந்நொடி உணர்கின்றேன்!

# மானிட வாழ்வில் புத்தகம் பேசுதும் (வெற்றி பெற்ற சிறுகதை)

ஜெய்னுலாப்தீன் பாதிமா அஸ்ரா,
வ/அல்ஹாமியா முஸ்லிம் வித்தியாலயம்

ஐயோ! இன்று எனது மகன் என்னிடம் புத்தகம் வேணும் என்று அழுகிறான். நான் என்ன செய்வது ஒன்றுமே புரியவில்லை. வானம் இருட்டுகின்றது. கருமேகமும் வண்ணமாக காட்சியளிக்கின்றது. ஒன்றுமே புரியவில்லை. ஆம் நான் அவ்வாறு நடந்துகொண்ட விதம் தான் போல் என்னை இன்று வாட்டி வதைக்கின்றது.

அன்று பணம் இருக்கின்றது என்று நான் புத்தகத்தை மதிக்காமல் அதற்கு மரியாதை கொடுக்காமல் அதனை தூக்கியெறிந்து அதற்கு நெருப்பு வைத்து அந்தக்காலத்தில் அதனை மதிக்காமல் அந்த புத்தகத்திற்கு செய்த கொடுமைகள் இன்று எனது மகனுக்கு ஒரு புத்தகம் வாங்க கூட என்னிடம் பணம் இல்லாது தவிக்கின்றேன். அப்போ என்னிடம் பணம் இருந்தது. இன்று இல்லை பணம் இருக்கின்றது என்று நினைத்துக் கொண்டு நான் செய்த வேலைகள் கொஞ்சமா? நெஞ்சமா?

அன்று கொஞ்சம் கூட யோசிக்காமல் பொது நூலகத்தை தீவைத்தேன். நூல்களை தேவையில்லாமல் கிழித்தேன். அன்று நான் நினைக்கவில்லை. இவை எனக்கோ அல்லது எனது சமுதாயத்திற்கோ பயன்படும் என்று. இவையெல்லாம் நினைக்காமல் கருத்தில் கொள்ளாமல் தானே இவ்வாறு எனக்கு இந்தநிலை ஏற்பட்டு இருகின்றது. அன்று நான் மதிக்காமல் அதனை பேணாமல் போன ஒரேயொரு காரணத்தால் தானா நான் இன்று இவ்வளவு கஷ்டத்தையும் துன்பத்தையும் அனுபவிக்கின்றேன் எனது நண்பன் வினோத் அன்று அறிவுரை கூறினான்.

நண்பா! நீ இவ்வாறு எல்லாம் புத்தகத்தை வீணான முறைக்கு பயன்படுத்தாதே இவ்வாறு பயன்படுத்தினால் நீ நாளை ஒரு நாள் இந்த புத்தகங்களை பற்றி யோசிப்பாய் அப்போது உனக்கு புரியும் இந்த நூல்கள் எப்படியான பயன்களை கொண்டுள்ளது என அப்போது நீ என்னை பற்றி யோசிப்பாய்.

உனது பணமோ உனது செல்வமோ உனக்கு உதவப் போவது இல்லை புத்தகத்தின் மூலம் நீ அடையும் நல்ல பயன்கள் தான் நாளை உனக்கும் உனது சமூதாயத்திற்கும் உதவும். இதை கவனத்தில் வைத்துக் கொள் எனது நண்பன் வினோத் இவ்வாறு எனக்கு கூறினான் அப்போது கூட நான் கேட்கவில்லையே அவன் அன்று எனக்கு கூறிய அறிவுரை இப்போது தான் விளங்குகின்றது ஓலை இளைத்த வீட்டின் நடுவே பேய்கின்ற மழை போல எனது நிலை ஆகிவிட்டதே.

நான் செய்த தவறால் இன்று எனது மகனின் வாழ்க்கை தலைகீழாகி விட்டதே ஐயா! அழுகின்றான் புலம்பி புலம்பி அழுகின்றான். இன்று ஏழையாகி விட்டேனே! அன்று என்னிடம் எவ்வளவு சொத்தும் பணமும் இருந்தது. இன்று எதுவுமே இல்லை எனது மகனிற்கு ஒரு புத்தகம் கூட என்னால் வாங்கியோ தேடியோ கொடுக்க முடியவில்லையே... நான் என்ன செய்வது ஒன்றுமே புரியவில்லையே! ஐயோ! ஐயோ!மகன் வருகின்றார் .....

அப்பாவை சந்தித்து அப்பா நீங்கள் செய்த தவறால் இன்று என்னுடைய வாழ்க்கையும் தலைகீழாகி விடுமோ என்று மகன் அப்பாவை பார்த்து விம்மி விம்மி அழுகின்றான் மகன் பேசிய வார்த்தைக்கு அப்பாவால் எந்தப் பதிலும் கூற முடியவில்லை அப்பா யோசித்த வண்ணம் இருக்கின்றார் சிலநாட்களுக்கு பின்னர் அப்பா கடை வீதியின் அருகே போய்க் கொண்டிருக்கின்றார் அப்போது அவருடைய நண்பன் வினோத்தை காண்கின்றார் வினோத் கண்ணாடி அணிந்தவாறு காருக்குள் இருந்து வெளியே வருகின்றார் வினோத்தை பார்த்து ஆச்சரியமடைந்து போய் நிற்கின்றார். வினோத் என்னுடை நண்பன் அல்லவா? அன்று ஏழையாக இருந்த வினோத் இன்று இந்த நிலமையிலா? என்று பார்த்தவர் திகைத்துப் போய் நிற்கின்றார்.

அப்பா வினோத்தை நோக்கி செல்கின்றார் வினோத் அப்பாவை கண்ணுற்றான் டேய் நண்பா நீயா எப்படி இருக்கின்றாய் என்று வினோத் கேட்கின்றான் அதற்கு அப்பா பதில் கூறுகின்றார் ஏதோ இருக்கின்றேன் என்று அதற்கு வினோத் சொல்லுகின்றான் நீ பெரிய பணக்காரன் அல்லவா என்னடா இந்த கோலத்தில் இருக்கின்றாய் ஆடைகள் எல்லாம் துருப்பிடித்த வண்ணம் அதற்கு அப்பா கூறுகின்றார். அன்று என்னிடம் பணம் இருந்தது நீ ஏழையாக இருந்தாய் நான் புத்தகங்களை மதிக்காமல் நாசப்படுத்தி அதன் விளைவு என்னை இன்று வருத்திக் கொண்டு இருக்கின்றது. நீ நூல்களுக்கு மரியாதை கொடுத்தாய் அவற்றை நல்ல முறையில் பேணி பாதுகாத்தாய் அதனால் நீ இன்று உயர்ந்த நிலையிலும் அந்த நூல்களை வீணாக்கிய நான் தாழ்ந்த நிலையிலும் காணப்படுகின்றேன்.

அன்று நான் செய்த வேலையால் இன்றுமகன் கஷ்ரப்படுகின்றான் என்று சொல்லி அழுகின்றார். இதனை கேட்ட வினோத் மனம் உருகி ஒரு புத்தகத்தை வாங்கிக் கொடுக்கின்றார்.

மகன் சந்தோசமாக செல்ல அப்பாவின் கண்களில் இருந்து கண்ணீர் வந்தது இப்போது புரிந்து கொண்டேன் நண்பா ஒரு புத்தகம் எவ்வளவு மதிப்பளிக்கின்றது என்றும் புத்தகத்தினால் பல நன்மைகள் உண்டு என்றும் இப்போது நான் உணர்ந்து கொண்டேன் எனவே இனிமேல் புத்தகத்தை நல்ல முறையில் பயன்படுத்திவேன்.

"வாசிக்க வாசிக்க மனிதன் பூரணமடைகின்றான்"

இன்று மானிட வாழ்வில் புத்தகமானது மனிதனுக்கு மிகவும் உதவுகின்றது. எனவே அவைகளுக்கு மதிப்பளித்து முக்கியத்துவம் கொடுப்போம்.

"நூல்கள் இல்லையெனில் மனித வாழ்வே இல்லை"

எனவே நூல்களை மதிப்போம் அதுமட்டுமன்றி அதனை நல்ல முறையில் பயன்படுத்துவோம்.

நூல்களை மதிப்பதாலும் அதனை நன்றான முறையில் செயற்படுத்துவதாலும் மனிதன் வாழ்வில் உயர்கின்றான் எனவே வாழ்க்கையில் அத்தியாவசியமானது நூல்களேயாகும்.

ஒவ்வொரு மனிதனும் நூல்களின் முக்கியத்தவத்தை அறிந்து அதனை சரியான முறையில் பயன்படுத்துவோம். எனவே வாழ்க்கைக்கு அவசியமான நூல்களை பாதுகாப்போம்.

# தேசிய வாசிப்பு மாதப் போட்டி முடிவுகள் 2017 வெற்றிப் பெற்றோர் விபரம்

| | போட்டி | இடம் | பாடசாலை | பெயர் |
|---|---|---|---|---|
| 01 | பாலர் பாடசாலை வர்ணம் தீட்டல் | 1ம்இடம் | தமிழ்அமுதம் முன்பள்ளி | சுபான் டில்சினி |
| | | 2ம் இடம் | புனித கப்பலேந்திமாதா முன்பள்ளி | வினோத் அக்ஷலா |
| | | 3ம் இடம் | இளஞ்சோலைமுன்பள்ளி | கி.அனுஜன் |
| 02 | தரம் 1 கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கான மனனம் "கொன்றைவேந்தன்" | 1ம் இடம் | முகத்தான்குளம் விக்னேஸ்வரா வி. | சகாயம் ஆன் சன்ஷிக்கா |
| | | 2ம் இடம் | முகத்தான்குளம் விக்னேஸ்வராவி. | கேதீஸ்வரன் யாழினி |
| | | 3ம் இடம் | அடைக்கலஅன்னை வி. | லஸ்டின் பெனான்டோ சனந்திகா |
| 03 | தரம் 2,3 கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கான சித்திரம் வரைதல் "புத்தகமும் நானும்" | 1ம் இடம் | அல்ஹாமியா முஸ்லிம் வித்தியாலயம் | ரஹ்மன் ஜனுன் நிதா |
| | | 2ம் இடம் | றிசாட் பதியுதீன் முஸ்லிம் வித்தியாலயம் | அன்வர் ஷதிக்கியா |
| | | 3ம் இடம் | முகத்தான்குளம் விக்னேஸ்வராவித்தியா | முகமட் சிராஜீதின் நதா |
| 04 | தரம் 4,5 கீழ்ப் பிரிவு மாணவர்களுக்கான "படம் பார்துக் கதை எழுதுதல்" | 1ம் இடம் | முகத்தான்குளம் அ.த.கபாடசாலை | தி.புகழறிவு |
| | | 2ம் இடம் | பெரியநொஞ்சிக்குளம் றோ.க.த.க.பா | பார்த்தீபன் திவ்வியதர்சினி |
| | | 3ம் இடம் | அருவித்தோட்டம் சிவானந்தா வி. | டிசாந்தினி துர்ஸ்ணகுமார் |
| 05 | தரம் 6,7,8 மத்திய பிரிவு மாணவர்களுக்கான கட்டுரை "மாணவர்களின் மாண்பும் நூலகத்தின் பண்பும்" | 1ம் இடம் | தரூல் உலூம் முஸ்லிம் வித்தியாலயம் | முகமட் மாஸீர் சமீஹாபேஹம் |
| | | 2ம் இடம் | தரூல் உலூம் முஸ்லிம் வித்தியாலயம் | ஜலீல் பாத்திமாஅமீசா |
| | | 3ம் இடம் | அடைக்கலஅன்னை வித்தியாலயம் | ஓலிகரசிகரன் றெஸ்னிகா |
| 06 | தரம் 9,10,11 மேற்பிரிவு மாணவர்களுக்கான மரபுக்கவிதை "வாசிக்க வாசிக்க வானமும் வசப்படும்" | 1ம் இடம் | தரூல் உலூம் முஸ்லிம் வித்தியாலயம் | நௌபர் பாத்திமா றுஸ்தா |
| | | 2ம் இடம் | அல்ஹாமியா முஸ்லிம் வித்தியாலயம் | அப்துல் வஹாப் அம்னா |
| | | 3ம் இடம் | அல்ஹாமியா முஸ்லிம் வித்தியாலயம் | ரவி ஜுமானா |
| 07 | தரம் 12,13 மேற்பிரிவு மாணவர்களுக்கான சிறுகதை "மானுடவாழ்வில் புத்தகம் பேசுதும்" | 1ம் இடம் | அல்ஹாமியா முஸ்லிம் வித்தியாலயம் | ஜெயனுலாப்தீன் பாத்திமா அஸ்ரா |

# தேசிய வாசிப்பு மாதம் 2017 பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள்










# தேசிய வாசிப்பு மாதம் 2017
# கிராமங்களுக்கான நூலக நடமாடும் சேவை
# 09.10.2017 -13.10.2017













